மலர்-2 இதழ்-45 ஜூலை 1-15 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




## புத்திரதோஷம் ஏற்படுவதற்கான காரணம் - பரிகாரம்

# விநாயகரின் மனதை குளிர வைக்கும் அபிஷேகங்கள்



முழு முதற் கடவுளான விநாயகரின் மனதை குளிர வைக்கவும் ஏராளமான அபிஷேகங்கள் உள்ளன. அரச மரத் தடியில் மேற்கு நோக்கி இருக்கும் விநாயகரை பூச நட்சத்திரன்று அன்னாபிஷேகம் செய்து வழிபட்டால் தொழிலில் லாபம் பெருகும்.

வேப்ப மரத்தடியில் கிழக்கு திசை நோக்கி இருக்கும் விநாயகரை உத்திராட்டதி நட்சத்திரத்தில் அபிஷேகம் செய்து பஞ்ச தீபம் ஏற்றி வழிபட்டால் மனதுக்கு விரும்பியபடி திருமணம் நடைபெறும். புன்னை மரத்தடி விநாயகரை ஆயில்ய நட்சத்திரத்தன்று இளநீர் அபிஷேகம் செய்து வழிபட்டால் தம்பதியர் ஒற்றுமை ஓங்கும்.

மகிழ மரத்தடி விநாயகருக்கு அனுஷம் நட்சத்திரத்தன்று மாதுளம் பழ அபிஷேகம் செய்தால் பில்லி, சூனியம், தீய வினைகள் திருஷ்டி அகன்று விடும். ஆல மரத்தடியில் வடக்கு நோக்கி இருக்கும் விநாயகருக்கு மகம் நட்சத்திரத்தன்று அபிஷேகம் செய்து வழிபட்டால் நோய்கள் நீங்கும். மாமரத்தடி விநாயகருக்கு விபூதி அபிஷேகம் செய்து வழிபட்டால் எதிரிகள் தொல்லை நீங்கும்.

வன்னிமரத்தடியில்உள்ளவிநாயகருக்கு அவிட்ட நட்சத்திரம் தினத்தன்று நெல் பொரி கொண்டு அபிஷேகம் செய்து வழிபட்டால் தடைபடும் திருமணங்கள் கை கூடும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேருவார்கள். பொதுவாக உத்திராடம் நட்சத்திரக்காரர்கள் விநாயகருக்கு பால் அபிஷேகம் செய்து வழிபடுவது மிக, மிக நல்லது.

பரணி, ரோகிணி, புனர்பூசம், அஸ்தம், மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சந்தன அபிஷேகம், ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தேன் அபிஷேகம் செய்வது நல்லது. மகம், உத்திரம், விசாகம், கேட்டை, பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் விநாயகருக்கு விபூதி அபிஷேகம் செய்தால் நல்லது நடக்கும். அபிஷேகத்தினால் இறைவன் குளிர்ந்து ஆசிர்வதிப்பான் என்பது புராணங்களின் கருத்து.



- இதயத்தில் கடவுளை தேடுங்கள். அங்கு கருணை இருந்தால் அவரது அருள் கிடைக்கும்.
- கடவுளை அடைவதற்கு குறுக்கு வழி எதுவும் கிடையாது. உண்மை ஒன்றே ஒரே வழி.
- நற்செயல் செய்வதற்காக கடவுளால் படைக்கப்பட்ட கருவிகளே மனிதர்கள்.
- அருளின் உயர்ந்த வடிவம் மவுனம். அதுவே உயர்ந்த உபதேசமும் கூட.வாயை மட்டும் மூடிக் கொண்டு மனதை அலைபாய விடுவது மவுனம் ஆகாது. அதனால் எந்தப் பயனும் இல்லை.
- மனதை எண்ணங்களிலிருந்து விடுவிப்பதே ஆன்மிக சாதனையின் நோக்கமாகும்.
- மந்திரங்களை இடைவிடாது சொல்வதால் மனம் அடங்கும். அந்நிலையில் மந்திரம், மனம், மூச்சு என எல்லாம் ஒன்றே என்பதை உணரலாம்.
- சுயமாக இயங்க முடியாததற்கு காரணம் வலிமையற்ற மனமே.
- குறை எப்போதும் வெளியில் இருக்காது; மனதில் தான் இருக்கிறது.
- அகந்தையை துறந்தால் ஆண்டவனின் அருள் உண்டாகும்.
- தினமும் புதுப்புது ஆசைகளை மனதில் வளர்க்காதீர்கள். மீறினால் தேவையற்ற சுமைகளை சுமக்க நேரிடும்.
- நான் யார் என்பதை அறிந்து கொள்ளவே, மந்திரம், தவம், வழிபாடு எல்லாம் இருக்கிறது.

# விபூதி மந்திரத்தின் சிறப்பு



எதிரிகள் தொல்லை முழுமையாக நீங்க சொல்ல வேண்டிய அபூர்வ மந்திரம்.
விபூதியை வலது கையில் வைத்துக்கொண்டு வடக்கு முகமாய் இருந்து கொண்டு
“ஓம் பகவதி என் தேகத்தில்
அடி முதல் முடி வரை திருகாளி,
உத்திரகாளி,மோடிக்காளி,ரீங்காளி,
பிரகாசகாளி, வஜ்ரக்காளி ஆகாசகாளி,
பூமிக்காளி, ஹரிகாளி, சிவகாளி
ஓம் ஸ்ரீம் ரீம் காத்து ரட்சிக்க சுவாகா.
என்று 21 உரு செபித்து இவ்விபூதியை தன்னைச்சுற்றிலும் போட்டு கொண்டால் எந்த மந்திரவாதி என்ன விதமான ஏவல் செய்தாலும் உங்களிடம் ஏறாது. எந்த தீய சக்தியும் உங்களை ஒன்றும் செய்ய முடியாது.

குறிப்பு: எந்தவொரு மந்திரம் செபிக்கும் முன்னரும் இக்கட்டு மந்திரத்தை செபித்து விபூதியை நம்மை சுற்றிப்போட்டுக்கொண்டால் அம்மந்திரத்தை சித்தி செய்ய விடாமல் செய்யும் துஷ்டசக்திகளும், கெட்டவர்களின் சதியும்,மற்ற எந்த இடையூறும் நீ அந்த விபூதியை விட்டு வெளியே வரும் வரை உன்னை நெருங்காது.
அதற்குள் நீ சித்தி செய்ய வேண்டிய மந்திரத்தை சித்தி செய்து கொள்ளலாம். நீ அவ்விபூதியை விட்டு வெளியேரி விட்டால் அவ்விபூதியின் ஆற்றல் முறிந்து விடும்.



ஆன்மிகமலர் மெயில் புக்



# புத்திர தோஷம் ஏற்படுவதற்கான காரணமும், அதற்கான பரிகாரமும்.

புத்திர தோஷம் ஏற்படுவதற்கான காரணங்கள் என்னென்ன, எந்தக் கோயிலுக்கு செல்லலாம், என்ன பரிகாரம் செய்யலாம் என்பதைப் பற்றி இக்கட்டுரையில் முழுமையாக விளக்கப்பட்டுள்ளது.

புத்திர தோஷம் என்பது ஒவ்வொரு லக்னத்திற்கும் வேறுபடும். பொதுவாக எந்த லக்னமாக இருந்தாலும் 5ம் இடம்தான் புத்திர ஸ்தானத்தைக் குறிக்கும். எனவே, அந்த 5ம் இடத்தை முக்கியமாகப் பார்க்க வேண்டியது அவசியம்.

நாம் செய்த பாவ புண்ணியத்திற்கு ஏற்ப நமக்கு மழலைச் செல்வம் கிடைக்கும் எனக் கூறுகிறார்கள். அந்தவகையில் 5ம் இடம் பூர்வ புண்ணிய ஸ்தானமாகத் திகழ்கிறது.

ஐந்தாம் இடத்தில் பாவ கிரகங்கள் (ராகு, செவ்வாய், சனி அல்லது சூரியன் அமர்ந்தால் ஒரு சிலருக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் போகும் அல்லது தாமதமாகும்.

ஒருவேளை 5ம் இடத்தில் உள்ள பாவகிரகங்களை சுபக் கிரகங்கள் பார்த்தால் குழந்தை பாக்கியம் கிடைக்க அதிக வாய்ப்புள்ளது.

அதேபோன்று, ஆணின் ஜாதகத்தில் புத்திர தோஷம் இருந்து, பெண்ணின் ஜாதகத்தில் 7ம் இடம் நன்றாக இல்லாமல் இருந்தால் கர்ப்பப்பை கோளாறுகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

ஒருவரிடம் கடன் பெற்றால் அதை முறையாக திருப்பிச் செலுத்த வேண்டும். அப்படி கடனைத் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றினால், அதனால் சந்ததி பாதிப்பு உண்டாகும் என்று ஜோதிட விதி கூறுகிறது.

அமாவாசை விரதம் கடைப்பிடிப்பது நமது பெற்றோர்களுக்கு நாம் செய்யும் கடமையாகும். தாய், தந்தையை இழந்தவர்கள், கணவனை இழந்த மங்கையர்கள், அமாவாசை விரதம் முறையாக இருந்து இறந்தவர்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்ய வேண்டும்.

முறையாக தர்ப்பணம் செய்து அமாவாசை விரதம் கடைபிடிக்காதவர்களுக்கும் புத்திர தோஷம் உண்டாகிறது. பிள்ளைகளின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. ஆண் சந்ததி உண்டாகத் தடை ஏற்படுகிறது.

## புத்திர தோஷம் எப்படி அறியலாம்?

தம்பதியரின் ஜாதக அமைப்பில் ஒருவருக்குப் புத்திர ஸ்தானம் கடுமையாக பாதிக்கப்பட்டு இருந்தாலும், ஒருவருக்கு வலிமையுடன் இருந்தால் பெண் குழந்தைக்கான வாய்ப்பு நிச்சயம் உள்ளது. புத்திர ஸ்தானம் நல்ல நிலையில் இருப்பினும், தம்பதியருக்கு ஆண் குழந்தை இல்லாததற்கு அவர்கள் வசிக்கும் வீட்டின் உகந்த திசை வாயிற்படி இல்லாததும் முக்கிய காரணமாகும்.

## தொடர்ந்து ஆண் குழந்தைகளுக்கான காரணம்

தம்பதியரின் ஜாதக அமைப்பில் புத்திர ஸ்தானம் நூறு சதவீதம் நல்ல நிலையில் இருந்தால், அதாவது புத்திரஸ்தானம் சர ராசியுடன் சேர்ந்து நல்ல நிலையில் இருந்தாலும், ஜாதகருக்கு ஆண் குழந்தைகளே பிறக்கும்.

## தொடர்ந்து பெண் குழந்தைக்கான காரணம்

தம்பதியரின் ஜாதக அமைப்பில் புத்திர ஸ்தானம் நூறு சதவிகிதம் நல்ல நிலையில் இருந்து, அதாவது புத்திர ஸ்தானம் உபய ராசியுடன் சம்பந்தம் பெற்று நல்ல நிலையில் இருந்தால் தொடர்ந்து பெண் குழந்தைகள் பிறக்க வாய்ப்புள்ளது.

## இரட்டைக் குழந்தைக்கான காரணம்..

தம்பதியருக்குப் புத்திர ஸ்தானம் நல்ல நிலையில் இருந்து கருத்தரித்த நேரமும், இடமும் இரட்டைக் குழந்தைகளுக்கான அமைப்பை நிர்ணயம் செய்வதும் இதற்குக் காரணமாக அமையும்.

## புத்திர தோஷம் போக்கும் கோயில்கள்

- திருநெல்வேலி பேராத்துச்செல்வி திருக்கோயில்
- திருநெல்வேலி தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில்
- கைலாசநாதர் திருக்கோயில், ராசிபுரம், நாமக்கல்
- கோயம்புத்தூர் கைலாசநாதர் திருக்கோயில்
- வேம்பத்தூர், சிவகங்கை மாசாணியம்மன் திருக்கோயில்
- மாசிலாமணீஸ்வரர் திருக்கோயில், வடதிருமுல்லைவாயில்
- ஞானபுரீஸ்வரர் திருக்கோயில், திருவடிசூலம்,
- செல்லாண்டியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்
- உறையூர், திருச்சி சிவந்தியப்பர் திருக்கோயில்,

## பரிகாரம்

உங்கள் நட்சத்திரமும் அமாவாசையும் கூடும் ஒரு நாளில் தம்பதியராக இராமேஸ்வரம் கடலில் 21 முறை மூழ்க வேண்டும். பின்பு, கோயில் பிரகாரத்திற்கு சென்று அங்குள்ள 21 தீர்த்தத்திலும் மூழ்கி சுவாமியை தரிசனம் செய்யலாம்.

ஸ்ரீகாளஹஸ்தி, திருவெண்காடு, திருக்கருகாவூர், திருநாகேஸ்வரம் போன்ற தலங்களுக்குச் சென்று உரிய வழிபாடு, பூஜைகள் செய்து வந்தால் சந்தான பாக்கியம் கிட்டும்.

பௌர்ணமி, தமிழ் மாதப் பிறப்பில் அன்னதானம் செய்துவர வம்சம் விருத்தியாகும்.

உங்கள் வீட்டில் நாக படம் உள்ள தெய்வத்தின் முன்பு 51 தீபங்கள் ஏற்றி வரலாம். நவதானிய சுண்டல் செய்து சிறுவர்களுக்கு விநியோகம் செய்யலாம்.

வெள்ளியில் ஒரு தலையுள்ள நாகம் வைத்து வீட்டில் தினசரி வழிபாடு செய்ய வேண்டும். இதனால் நாகத்தால் ஏற்பட்ட தோஷம் நீக்கும்.

ஹரிவம்சம் என்ற இதிகாசத்தை படித்தாலோ, மற்றவர்கள் படிக்கும் போது கேட்டாலோ புத்திர தோஷம் விலகும்.



# நந்தியின் காதில் துன்பங்களை கூறும் பழக்கம்

நந்தியின் காதுகளில் கஷ்டங்களைச் சொன்னால் அவை நிவர்த்தியாகும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. இது குறித்து விரிவாக அறிந்து கொள்ளலாம்.

சிவபெருமானின் அருகில் இருக்கும் பெரும் பாக்கியத்தை பெற்ற தேவ கணம் நந்தியம்பெருமான். சிவனின் இருப்பிடமான கயிலாயத்தின் காவலர். நந்தியின் அனுமதியின்றி சிவனைப் பார்ப்பது இயலாது. பார்வதி தேவியே தன் கணவனான சிவபெருமானைக் காண நந்தியிடம் அனுமதி வேண்டி நின்றதாக புராணங்கள் கூறுகிறது.

இவ்வளவு பெருமைமிக்க நந்தியின் காதுகளில் நம் கஷ்டங்களைச் சொன்னால் அவை நிவர்த்தியாகும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. எதனால் நாம் நந்தியின் காதுகளில் நம் கஷ்டங்களைச் சொல்ல வேண்டும். மனதில் நினைத்தால் போதாதா?

இதோ காரணம்... எந்நேரமும் தன்னுடைய வேகமான மூச்சுக்காற்றால் சிவனை நோக்கி விசிறியபடி சிவத்தொண்டு புரிந்து வரும் நந்தியின் காதுகளில் நம் மூச்சுக் காற்று படும்படி ‘நந்திகேச மகாபாஹு, சிவத்யான பாராயணா, உமாசங்கர சேவோர்த்தம் அனுக்யாம் தாதுமர்ஹசி’ என்று பிரார்த்திக்க வேண்டும். அதாவது ‘மூச்சுக் காற்றால் மிகப்பெரும் சிவத்தொண்டு புரிகின்ற நந்தியம் பெருமானே.. உமாசங்கரனை வழிபட எனக்கு அனுமதி தந்தருள்வாயாக..’ என்று மெதுவாக கேட்க ஆரம்பித்தார்கள் பக்தர்கள்.

அதுவே நாளடைவில் நம் குறைகளை நந்தி யின் காதுகளில் முறையிட்டால் அவைகளை ஈஸ்வரனிடம் எடுத்துக் கூறி தீர்த்து வைப்பார் என்று ஆயிற்று. ஆகவே தான் சிவனுக்கும், நந்திக்கும் உகந்த நாளான பிரதோஷத்தில் நந்தியின் காதுகளில் தங்கள் குறைகளைச் சொல்ல மக்கள் போட்டி போடுகின்றனர் .

மேலும் நாம் வேளாண்மை செழிக்க நந்தியைப் பூஜிக்க வேண்டும் என்கின்றனர் ஆன்றோர்கள்.

காரணம் நாம் நெல் விளைந்து அறுவடை ஆனதும் சத்தான அரிசியை நம் பயன்பாடிற்கு எடுத் துக்கொண்டு கழிவுப்பொருளான வைக்கோல் களை காளை மாடுகளுக்கு தருகிறோம்.

காளையானது அதையும் உணவாக எடுத்துக்கொண்டு அதினின்று வெளிவரும் சாணத்தை உரமாக நமக்கு பயன்பட வைக்கிறது. இதற்கு நன்றியாகவே நாம் வேளாண்மை செழிக்க நந்தியை வணங்குகிறோம்.


ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும் 8825844033



ஆன்மிகமலர் மெயில் புக் 1-15 ஜூலை 2018 7

www.aanmeegamalar.com

# உதவியின் பலன்

சென்னையை அடுத்த திருநின்றவூரில், முன்பு இரப்போர்க்கு இல்லை என்று கூறாமல் வாரி வாரி வழங்கிய காளத்தியப்பர் என்ற வள்ளல் வாழ்ந்து வந்தார்.

மிகப் பெரிய செல்வந்தரான அவருக்கு நிறைய நிலபுலன்கள் இருந்தன. இதன் மூலம் வரும் வருவாய், மற்றும் விளைச்சல்கள் மூலம், ஏழைகளுக்கு அள்ளி வழங்கி, வள்ளுவம் வழி நின்று வாழ்ந்து வந்தார்.

இவ்வாறாக பசுமை கொழித்த திருநின்றவூரில் ஒரு சமயம் மழை பொய்த்து பஞ்சம் பீடித்தது.

காடு, கழனி, ஏரி, குளம் குட்டைகள் முதலியன நீரின்றி வறண்டன. மக்கள் சொல்லொண்ணா துன்பத்திற்கு ஆளாயினர்.

வள்ளல் காளத்தியப்பர் திருநின்றவூர் மக்களை, தன் செல்வத்தின் மூலம் பஞ்சத்தின் கொடுமையிலிருந்து காப்பாற்றினார்.

ஒரு கட்டத்தில் தனது நிலபுலன்களை எல்லாம் விற்றும் தான தருமம் செய்யும் சூழ் நிலையும் ஏற்பட்டது. பஞ்சம் மேலும் மேலும் கடுமையாகிக் கொண்டே சென்றது. இதற்கும் மேலும் விற்பதற்கு ஒன்றுமில்லை என்னும் நிலை வந்து காளத்தியப்பர் நடுவீதிக்கு வந்துவிட்டார்.

இரப்போர்க்கு "இல்லை" என்று சொல்ல விரும்பாத காளத்தியப்பர், இதற்கு மேலும் இந்த ஊரில் இருக்கப் பிடிக்காமல், தனது மனைவியுடன் அவளது சொந்த ஊருக்கு புறப்பட்டுச் சென்றார்.

செல்லும் வழியில் இரவில் ஒரு பாழடைந்த மண்டபத்தில் தம்பதிகள் தங்க நேரிட்டது.

இதே நேரத்தில்....

மதுரகவிராயர் என்பவரின் வாழ்க்கையும் இன்பமில்லாதே இருந்து வந்தது. இவர், தமிழ்ச் சுவையில் பரிபூரணத் திளைப்பில் இருந்து வருபவர்.

பிறகு, கொஞ்ச காலத்திற்குப் பிறகு, மோசமான வறுமைக்கு ஆளானார். வறுமையால், அவருடைய தமிழ்ப் பணியும் கெட்டன.

அவர் என்ன செய்வது என்று திகைத்தார். இறுதியில் காளத்தியப்பர்தான் தம்முடைய கொடிய வறுமைக்குரிய நல்ல துணை என்று நினைந்தார். இவ்வாறு எண்ணிய அவர், அந்த ஊரை விட்டு புறப்டுச் சென்றார்.

காளத்தியப்பரைக் காணப் புறப்பட்டுச் சென்ற மதுரகவிராயர், இரவானதும், வழியிலுள்ள பாழடைந்த மண்டபத்தில் தங்கினார். இந்த வயிறு ஒரு நாளைக்கு எத்தனை முறை உணவு கேட்கிறது? இந்த வயிறு நெருப்பா எரிகிறதே என எண்ணி வருந்தினார்.

மண்டபத்தில் அங்கும் இங்கும் சிலர் துணிகளை விரித்தும், சிலர் வெறுந்தரையிலும் படுத்து உழன்று கொண்டிருந்தனர். கவிராயருக்கு வழியில் நடந்த களைப்பும், உள்ளத்தின் சோர்வும், பசித் துன்பமும், மண்டபத்தில் காணக் கிடைத்த காட்சியும் அவர் மனதை பலவீனமடையச் செய்தது.

உடம்பின் வலியாலும், பசியின் கடுமையினாலும் அவருக்குத் தூக்கமும் வரவில்லை.

இந்த ஏக்கத்துடன் அவர் புரண்டு புரண்டு படுத்தார். அவருக்குத் தூக்கமே வரவில்லை. மனம் நொந்து, தமது வறுமையை நோக்கி...

நீளத் திரிந்துழன்றாய்நீங்கா நிழல்போல
நாளைக் இருப்பாயோ நல்குரவே காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே
நானெங்கே இன்றைக்கே சற்றே இரு.

என பாடினார்.

"தரித்திரமே! நீங்கா நிழல் போல நீளத் திரிந்துழன்றாய். போகுமிடமெல்லாம் தொடரும் நிழலைப் போல என்னோடு நீ நீண்டகாலமாக இருந்து வருகிறாய், நாளைக்கு இருப்பாயோ?, நாளைக்கு நீ என்னுடன் இருக்க முடியுமா? (முடியாது) காளத்தி நின்றைக்கே சென்றக்கால் – காளத்தியப்பன் வாழும் திருநின்றவூரை நான் சென்றடைந்த பிறகு, நீ எங்கே நானெங்கே – நீ எங்கே தொலைவாயோ, நான் எங்கே இருப்பேனோ, இன்றைக்கே சற்றே இரு – அதனால் இன்று ஒருபொழுது மட்டும் வறுமையே நீ என்னை வாட்டி முடித்து விடுவதற்கு இருப்பாயாக!" என்பது இப் பாடலின் பொருள்.

மதுரகவிராயர் இந்தப் பாடலை பாடும்போது இன்னொரு புறம் படுத்திருந்த காளத்தியப்பரின் செவியில், இந்தப் பாற்கள் விழுந்தன.

ஆதலால், இன்று மட்டும் நீ என்னோடு இருந்துவிட்டுப் போ! என்ற கருத்துடன் கூடிய பாடலைக் கேட்டு...

காளத்தியப்பரின் காதில் விழுந்த இந்தப் பாற்கள், இது அவர் உள்ளத்தைக் கவர்ந்தாலும், அதனின் வரிகளைக் கேட்டுத் துடித்துப் போனார்.

என்னை நம்பி வந்திருக்கும் இப்புலவருக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றுமே இல்லையே? என மனம் வெம்பினார்.

இவருக்கு இல்லை என்று நான் சொல்வதை விட இறப்பதே மேல்!' என்று எண்ணித் துணிந்தெழுந்தார்.

உடனே அருகிலிருந்த பாம்பும் புற்றை நோக்கிச் சென்றார். பாம்பு தீண்டி இறந்து போக உள்ளம் ஒளித்து, புற்றினுள் கையை நுழைத்தார். பாம்பினால் கடிக்கப்பட்டு இறந்துவிடுவோம் என்ற துணிவால் காளத்தியப்பர் இவ்வாறு செய்தார்.

ஆனால், புற்றுக்குள் இருந்த நாகம், காளத்தியப்பரைத் தீண்டவில்லை. மாறாக......

புற்றினுள் இருந்த நல்ல பாம்பு, அறம் வளர்த்த காளத்தியப்பர் கையில் ஒளிவீசும் மாணிக்கம் ஒன்றைக் கக்கியது.



கை தீண்டப்படாமல், உள்ளங்கை குளிர்ந்த நிலைத் தன்மையைக் கண்டுணர்ந்த காளத்தியப்பர், கையை வெளியே இழுத்துப் பார்த்தார்.

உள்ளங்கையில் ஒளிவீசிய வண்ணம் மாணிக்க கல் ஒன்று கண்களைக் கூசச் செய்தது. அளவு கடந்த மகிழ்ச்சி கொண்டார். உடனே மதுரகவிராயர் அருகில் சென்றார்.

கவிராயரை வணங்கி, "இந்த மாணிக்கத்தைப் பெற்று உங்களது வறுமையைப் போக்குங்கள்!" என்று முகமலர்ச்சியுடன் கூறி, மாணிக்கத்தை அவரிடம் கொடுத்தார்.

அப்போது மதுரகவிராயர் ஒன்றும் புரியாமல் திகைக்க...

இதைக் கண்ட காளத்தியப்பர், உங்கள் பாட்டைக் கேட்டது முதல் மாணிக்கத்தை அவரிடம் கொடுத்த சம்பவம் வரை கூறிமுடித்தார்.

இதைக் கேட்ட மதுரகவிராயர், இத்தகைய பெருங்குணம் படைத்த தங்களின் பெயரைத் தெரிந்து கொள்ளலாமா? எனக் கேட்டார்.

காளத்தியப்பர் உடனே, நீங்கள் யாரைக் காண வந்தீர்களே, அந்த காளத்தியப்பர் நான்தான் என்று சொல்லிவிட்டு....

தாங்கள் யாரோ? என்றார்.

நான் தான் மதுரகவிராயர்.

பெயரைக் கேட்டளவில், தாங்கள்தான் மதுரகவிராயரோ... என்று கூறி மகிழ்ந்தவாறு, மதுரகவிராயரை மார்புறத் தழுவிக் கொண்டார். நாகத்தை ஆபரணமாக அணிந்திருக்கும் ஈசனின் விளையாட்டே இது என்று எண்ணி வியந்தார்.

ஆனாலும், ஈகைக்காக உயிரையும் விட துணிந்த காளத்தியப்பரை போற்றி பணிந்தார்.

கொடுக்கவேண்டும் என்கிற எண்ணம் இருப்பவர்களுக்கு இறைவன் அள்ளிக் கொடுக்கமாட்டான், கொட்டிக்கொடுப்பான்!. எதிர்பார்க்காத இடங்களில் இருந்தெல்லாம் அவர்களுக்கு உதவிக்கரம் நீளும். காளத்தியப்பரின் வாழ்க்கையே இதற்கு சிறந்த உதாரணம்.

இந்த உதாரத்தை வைத்துதான் முடிந்த அளவுக்கு மற்றவருக்கு உதவி செய்யுங்கள். உங்கள் வாழ்க்கை மேன்மேலும் வளமாகும்.

கோவில் கட்டுவது, இறைசேவையில் ஈடுபடுவது, ஆன்மிக சேவை செய்வது போன்ற இறைத் தொண்டிற்கு தங்களால் ஆன உதவிகளை தாராளமாக செய்யுங்கள். அவர்களின் சேவையின் பலனில் ஒரு பங்கு உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும்.

– ராஜன், திருநீர்மலை.

www.aanmeegamalar.com

# நதிகளில் தர்ப்பணம் செய்வதன் அவசியம்

அகத்தியர் தென்திசை வரும் வழியில், விதர்ப்ப நாட்டை அடைந்தார். அந்த நாட்டு மன்னன் நடத்திய யாகத்தில் பங்கேற்றார். யாககுண்டத்தில் நெருப்பு கொழுந்து விட்டெரிந்த போது, அதில் இருந்து ஒரு பெண்மணி வெளிப்பட்டாள். அப்போது அசரீரி தோன்றி, "அகத்தியரே! நீர் இந்தப்பெண்ணை மணந்து கொள்ளும். இவளது பெயர் உலோபமுத்திரை," என்றது. அகத்தியரும் தெய்வ வாக்கிற்கேற்ப அவளது சம்மதத்தைக் கேட்டார்.

"மாமுனிவரே! நான் இந்நாட்டில் தோன்றியதால், விதர்ப்ப தேசத்து அரசரே என் தந்தையாகிறார். அவர் சம்மதம் தெரிவித்தால், நான் உங்கள் மனைவியாகிறேன்," என்றாள். விதர்ப்ப அரசனும் சம்மதம் தெரிவித்தான்.

அப்போது உலோபமுத்திரை,"அகத்தியரே! தாங்கள் என்னை மணம் முடிக்க வேண்டிய அவசியத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்றாள்.

"உலோபா! என் முன்னோர்கள் ஆண் குழந்தை இன்மையால், இறந்தும் திதி செய்ய நாதியின்றி தவிக்கின்றனர். அவர்களால் சுவர்க்கத்தை அடைய முடியவில்லை. நானும் துறவியாகி விட்டதால், அவர்களின் நிலைமை மோசமாகி விட்டது. அவர்களின் ஆத்ம சாந்திக்காக, நான் திருமணம் முடிக்க வேண்டியுள்ளது. பிதுர் தர்ப்பணம் செய்யாதவன் நரகத்தை அடைவான் என்பதை நீ அறிவாய். அவர்களின் விருப்பப்படி, நான் இல்லறத்தில் ஈடுபட்டு, ஒரு மகனை பெற்று, அவன் மூலமாக தர்ப்பணம் செய்ய வேண்டும். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றாவிட்டால், நான் நரகத்தை அடைவேன் என சாபமும் இட்டுள்ளனர்," என்றார்.

இதைக் கேட்ட விதர்ப்ப மன்னன், "அகத்தியரே! இந்த காரணத்துக்காக உமக்கு எம் மகளை தருவதற்கில்லை. அப்படி தர வேண்டுமானால், நான் கேட்கும் பொருளை நீர் எனக்குத் தர வேண்டும்," என சொல்லி விட்டான்.

"இதென்ன சோதனை?

துறவியிடம் ஏது செல்வம்? இந்த மன்னன் கேட்கும் பொருளுக்கு எங்கே போவேன்?" என அகத்தியர் எண்ணிக்கொண்டிருந்த போது, லோபமுத்திரையும், "முனிவரே! என்ன யோசனை? என் தந்தை சொல்வது சரிதானே! இப்பூவுலகில் இனிய இல்லறம் நடத்த பொன்னும், பொருளும் தேவை என்பதை நீர் அறிய மாட்டீரா? எனவே மிகப்பெரிய மாளிகை கட்டும் அளவுக்கு இடமும், அதை நிரப்புமளவுக்கு செல்வமும் கொண்டு வந்து என்னை மணம் முடித்துக் கொள்ளும். இல்லாவிட்டால், நீர் நரகம் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதைப் புரிந்து கொள்ளும்," என்று தீர்மானமாக சொல்லி விட்டாள்.

குள்ளமான தன்னை ஒரு பெண் மணமுடிக்க சம்மதித்ததே பெரிய விஷயம் என்ற நிலையில், அகத்தியர் பலநாட்டு மன்னர்களிடமும் யாசித்து பொருள் பெற்றார். அதை உலோபமுத்திரையிடம் தந்து திருமணம் செய்து ஒரு மகனைப் பெற்றார். முன்னோர்கள் சாபம் நீங்கி அவரை வாழ்த்தினர்.

பின் அகத்தியர், லோபமுத்திரையிடம், "அடங்காமல் பிரவாகம் எடுத்த நதிபோல், என்னை ஆட்டி வைத்தவளே! இனி, நீ எனக்கு அடங்கி நடக்க வேண்டும். எந்த செல்வம் உனக்கு அவசியப்பட்டதோ, அந்தச் செல்வம் உலகம் முழுமைக்கும் கிடைக்க வேண்டும். உலகம் செழிக்க தண்ணீர் தேவை. தண்ணீர் இருந்தால், உலகத்தின் எல்லாப்பகுதியும் தானாக செழித்து விடும். பயிர் பச்சைகள் வளரும். இந்த வேலையைச் செய்வதற்குத்தான், சிவபெருமான் என்னைத் தென்திசைக்கு அனுப்பினார். உலோபா! நீ என்கமண்டலத்துக்குள் வந்து விடு," எனச்சொல்லி அவள் மீது தீர்த்தம் தெளித்தார்.

அவள் தண்ணீராக மாறி, கமண்டலத்தில் புகுந்தாள். பின், அகத்தியர் சிவபூஜை செய்து கொண்டிருந்த வேளையில், கமண்டலத்தை காகம் தட்டிவிட, அதிலிருந்து உலோப முத்திரை, காவிரி நதியாக பிரவாகமெடுத்தாள். மீதியிருந்த நீரை தென்திசையிலுள்ள பொதிகையில் தாமிரபரணியாக பெருக்கெடுக்கச் செய்தார்.

அகத்தியரின் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து முன்னோர்களின் ஆத்மா சாந்தியடைய உதவிய லோபமுத்திரை நதியாக மாறியதால் அந்த நதிக்கரையில் தர்ப்பணம் செய்பவர்களின் முன்னோர்களின் ஆத்மா சாந்தியடையும் என்ற காரணத்தால்தான், தர்ப்பணம் செய்பவர்கள் நதிக்கரையில் தர்ப்பனம் செய்ய வேண்டும் என்ற வரைமுறை தோன்றியது.

இந்த நதிகளில் தை அமாவாசையன்றும், முன்னோர்களின் திதி நாட்களிலும் நீராடி, தர்ப்பணம் செய்தால் முன்னோரின் ஆசி கிடைக்கும்.



வாஸ்து கூறும் உண்மை...

# ஆண் மனை பெண் மனை

நீங்கள் வசிப்பது ஆண் மனையா பெண் மனையா பெண் மனையில் வசித்தால் ஆன்மை போய்விடுமா? தெரிந்து கொள்ள இதனை படியுங்கள்...

ஒரு மனை என்பது சின்னதோ, பெரிதோ அதை பற்றி கவலையில்லை. அந்த மனையின் குறுக்கே, வாஸ்து புருஷன் கையை காலை நீட்டி படுத்திருக்கிறதா ஒரு ஐதீகம்.

அதா சொர்க்கத்திலேயே வீடு கட்டினாலும், எட்டுக்கு எட்டுல பெட்ரூமை கட்டியாச்சுன்னு வச்சுக்கோங்க. தூங்காத வரம் வாங்கின மாதிரி ஏங்க வேண்டியதுதான்.

வாஸ்துவில் கூறப்படும் உண்மைகள் அனைத்தும் அறிவியல் சார்ந்தே இருக்கிறது என்கிறபோது அது எப்படி மதம் சார்ந்த விஷயமாக கருதப்படும்.

எந்த நிலையிலும் வாஸ்துவில் பணத்திற்காக விற்கப்படும் பரிகாரப் பொருட்களுக்கும், தேவையில்லாமல் செய்யப்படும் பூஜை, மந்திரம், தந்திரம் போன்ற கண்கட்டு வித்தைகளுக்கு என்றுமே வேலையில்லை. வீட்டீல் வாஸ்து தோஸம் இருந்தால் அதனை தான் முதலில் சரி செய்ய வேண்டும் தவிற அதை விட்டு விட்டு போலியான விசயங்கள் மூலம் தீர்வுகள் ஒரு போதும் தராது.

எனவே சூரியனை ஆதாரமாகவும், பூமியை இருப்பிடமாகவும் வைத்துள்ள நம் மனித இனம் அனைத்திற்கும் வாஸ்து என்பது அடிப் படையான ஒன்றாகும்.

மனிதர்களில் ஆண் பெண் தெரியும். விலங்குகளில் ஆண் பெண் தெரியும். அதே மாதிரி மனையிலும் ஆண் பெண் இருக்கு தெரியுமா?

ஆமா... ஆண் மனை பெண் மனை என்று இரண்டு இருக்கு. தெற்கு வடக்கு பகுதி நீலம் அதிகமாக இருந்து, கிழக்கு மேற்கு பகுதி நீலம் குறைவாக இருந்தால் அது பெண் மனை எனப்படும்.

இது போன்ற மனையை பெண் ஜாதக அமைப்பிற்கு ஏற்றார் போல், வீடு அமைப்பது நல்லது.

கிழக்கு மேற்கு பகுதி நீலம் அதிகமாக இருந்து, தெற்கு வடக்கு பகுதி நீலம் குறைவாக இருந்தால் அது ஆண் மனை எனப்படும்.

இந்த மனையை ஆண் ஜாதக அமைப்பிற்கு ஏற்றார் போல் வீடு அமைப்பது நலம்.

வீடு கட்டும் போது கொஞ்சம் நீளம் இருக்கலாம் அதிகமான நீளம் இருந்தால் அது பாளாய் போன வீடு தான் அதிலே என்றுமே துன்பம் தான் வரும்.

வீடு அமைக்கும் போது கொஞ்சம் வடக்கு தெற்கு கொஞ்சம் நீளம் இருந்தால் பெண் கை ஓங்கி இருக்கும்.

வீடு அமைக்கும் போது கிழக்கு மேற்கு நீளம் அதிகம் இருந்தால் ஆண் கை ஓங்கி இருக்கும்.

எந்த வீட்டீல் பெண்கள் கைய் ஓங்கி நன் நடத்தை வெளிபடுகிறதோ அந்த வீடு தான் மேன்மைக்கு வரும்.

தொழில் முறை கட்டடம் கட்டும் போது ஆண் மணையைய் அமைத்து கொள்ள வேண்டும்.

உங்கள் தொழில் இருக்கும் இடத்தில் தலைவன் அமரும் இடம் பெண் மனையாக இருந்தால் அங்கு மஹா லக்ஷ்மி அம்சம் அதிக மாக ஜொலிக்கும்.

நீங்கள் வசிக்கும் வீடு சரியில்லை என்றால் அனைத்துமே போய் விடும் அப்புறம் எப்படி நல்ல ஆண் மகனாக இருக்க முடியும் அனைத்து நோய்களுக்கு ஒரு சில மூல காரணம் ஜாதகமும் , வாஸ்துவும் தான் அதிக காரணமாக இருக்கும். இரண்டையும் சரிசெய்யும் போது வாழ்வில் சுபிக்ஷம் ஏற்பட்டே தீரும். நரகமாய் இருக்கும் வீடு சொர்க்கம் ஆவதும், சொர்க்கமாய் இருந்த வீடு நரகம் ஆவதும் உங்கள் வீட்டு வாஸ்துவில் தான் அரிந்து கொள்ளும் விதத்தில் தான் அமையும்

– மு.கிருஷ்ணமோகன்

ஸ்ரீ காலபைரவி ஜோதிட நிலையம்

தொ.பே.எண்: 08526223399





## நம் மனதில் உள்ள இறைவனை அறிவோம்

நமசிவாய அஞ்செழுத்தும் நல்குமேல் நிலைகளும்
நமசிவாய அஞ்சிலஞ்சும் புராணமான மாயையும்
நமசிவாய அஞ்செழுத்து நம்முளே இருக்கவே
நமசிவாய உண்மையை நன்குரைசெய் நாதனே.

நமசிவாய என்ற நாமத்தை எந்நேரமும் மனதில் தியானித்து நம்முள்ளே இருக்க வைத்தால் மாயை எனபடுவது அஞ்சி ஓடும், நன்மைகள் பல கிட்டும் ஆகவே உண்மையான அந்த மந்திரத்தை நீ மனதிற்குள் எப்போதும் தியானித்து கொண்டிருப்பாய்.

நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுஷ்பந் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று சொல்லு மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ.

ஒரு கல்லை நட்டுவைத்து அக்கல்லுக்கு பூமாலை போட்டு அதற்கு தெய்வமென்று பெய ரிட்டு அதை சுற்றி வந்து முணமுண வென்று மந்திரங்கள் என்கிற பெயரில் எதோ சொல்லுகிறீர். நீர் செய்வது எப்படி இருக்கிற தென்றால் ,சமையல் செய்யும் பாத்திரம் உணவின் சுவையை அறிவது போல் இருக்கிறது.

எவ்வளவு ருசியாக சமைத்தாலும் அந்த பாத்திரத்துக்கு சுவை தெரிவது இல்லை அதே போல எவ்வளவு பூக்கள் போட்டாலும் மந்திரங்கள் எத்துனை ஓதினாலும் அதற்கு பயனில்லை. சிவம் என்பது தனியாக வெளியில் இல்லை சிவம் நம்மில் கலந்து இருக்கிறது என்கிறார் சிவவாக்கியர்.


ஆன்மிகமலர் மெயில் புக்

# வேறு எந்த சிந்தனைக்கும் இடம் கிடையாது

பொகோஜூ (Bokoju) என்ற ஞானியை, "நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்களது சமயக் கோட்பாடுகள் என்ன?" என்று சிலர் கேட்டார்கள்.

அதற்கு அவர், "நான் மிகச் சாதாரண வாழ்க்கையில் வாழ்கிறேன். இதுதான் என் கொள்கை. எனக்குப் பசி எடுத்தால் புசிக்கிறேன். தூக்கம் வந்தால் தூங்குகிறேன். அவ்வளவுதான்" என்றார்.

ஆமாம். ஒரு வாழ்க்கை என்பது இப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால் கேள்வி கேட்டவர் மிகவும் குழப்பம்

அடைந்து, "ஆனால் நீங்கள் செய்வதில் நான் எதையும் தனித் தன்மையாகப் பார்க்க முடிய வில்லையே" என்றார்.

அதற்கு பொக்கோஜு, "ஆமாம், அதுதான் முக்கியம். அதில் எந்தவித தனித் தன்மையும் கிடையாது" என்றார்.

தனித்தன்மைக்காக ஏங்கும் எல்லாரும் அகங்காரத்தின் பின்னேதான் செல்கிறார்கள்.

கேள்வி கேட்டவர் மறுபடியும், "நீங்கள் செய்வதைத் தான் எல்லாரும் செய்துகொண்டு இருக்கிறார்கள். பசி எடுத்தால் புசிக்கிறார்கள். உறக்கம் வந்தால் தூங்குகிறார்கள்" என்றார் மறுபடியும்.

பொக்கோஜு சிரித்துக்கொண்டு, "அப்படி இல்லை. அவர்கள் செய்வதிலும், நான் செய்வதிலும் ஒரு வேறுபாடு உண்டு. நீங்கள் சாப்பிட்டுக்கொண்டு இருக்கும்பொழுது, உங்கள் மனம் ஆயிரக்கணக்கான எண்ணங்களை அசை போட்டுக்கொண்டு இருக்கும்.

நீங்கள் கனவு காண்பீர்கள். கற்பனை செய்வீர்கள். வேறு எதையோ நினைத்துக்கொண்டு இருப்பீர்கள்நீங்கள் சாப்பிடும்பொழுது அங்கே நீங்கள் உண்மையில் இல்லவே இல்லை. ஆனால் நான் சாப்பிடும்பொழுது நான் சாப்பிட மட்டும்தான் செய்கிறேன். வேறு எந்த சிந்தனையும் எனக்குக் கிடையாது.

அதேபோல், நீங்கள் தூங்கச்செல்லும் பொழுது ஆயிரம் கற்பனைகள், கனவுகள், எதிர்ப்புகள் என்று பல சிந்தனையில் மூழ்குகிறீர்கள். ஆனால் நான் தூங்குவதானால், தூங்க மட்டும்தான் செய்கிறேன். வேறு எதுவும் கிடையாது. வேறு எந்த சிந்தனைக்கும் இடம் கிடையாது. ஏன், பொக்கோஜீ என்பவரே அங்கு கிடையாது.

சாப்பிடுவதனால் அங்கு சாப்பிடுதல் மட்டும்தான் இருக்கும். அதேபோல் நடப்பதானால் நடப்பது மட்டுந்தான் இருக்கும். அங்கு பொக்கோஜு இல்லை" என்றார்.

– ஓஷோ



# உணர்வின்றி செய்யும் காரியங்கள் எல்லாம் விஷமங்கள்தான்

புத்தர் கூறுகிறார்!

நூறு வருடங்கள் உங்கள் வாழ்வில் செய்யும் எல்லா செயல்களைக் காட்டிலும், தியானத்தில் நீங்கள் கழிக்கும் ஒரு நாள் சிறந்தது என்கிறார் புத்தர்.

தியானத்தை தவிர மற்ற செயல்கள் எல்லாம் விஷமங்கள் என்கிறார்.

இந்த சமூகத்தை திருத்த வருகிறவர்கள், சமய போதகர்கள், பொதுச் சேவை செய்கிறவர்கள் எல்லோருமே உன்னைச் சும்மா இருக்க விடுவதில்லை.

நீயும் சும்மா இருப்பதற்கு பயப்படுகிறாய். அப்போது உன்னையே நீ சந்தித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. உன்னிடமிருந்து எப்போதும் தப்பித்துக் கொண்டே இருக்கிறாய்.

புத்தரைப் பொறுத்த வரையில் உணர்வின்றி செய்யும் காரியங்கள் எல்லாம் விஷமங்கள்தான்.

பிரக்ஞையோடு செய்யும் எந்தக் காரியமும் புண்ணியமான காரியம், அவரவர் எண்ணத்துக்கு ஏற்ப அவரவர் நல்ல காரியங்களைச் செய்கிறார்கள்.

ஆனால் நான் நல்லது செய்கிறேன் என்ற எண்ணமே, அவர்களின் அகங்காரத்தை பலமாக்கி வைத்திருக்கிறது.

அகத்திலிருந்து நீ வாழ்வதில்லை, பிறரைப் பார்த்து நடந்து கொள்வதுதான் உன் வாழ்க்கை என்றாகிப் போய் விட்டது, உண்மையிலேயே புத்திசாலியாக உள்ளவன் தன்னைப் பிறரோடு ஒப்பிட்டுக் கொள்ளவே மாட்டான்.

தாழ்வு மனப்பான்மை உள்ளவர்கள்தான், மற்றவர்கள் தம்மை மதிக்க வேண்டும் என்று நினைப்பார்கள்.

உண்மையாகவே ஒரு சிறந்த மனிதர், மற்றவரோடு தன்னை ஒப்பிட்டுக் கொள்வதே இல்லை, தனக்கு ஒப்புவுவமை எதுவும் இல்லை என்பது அவருக்குத் தெரியும்.

இந்த ஒரு அருமையான மாற்றம் எப்போது சாத்தியம்?

அதிக கவனத்தோடு இருப்பதுதான் இதற்கு ஒரே வழி, எந்த அளவுக்கு நீ கவனத்தோடு இருக்கிறாயோ, அந்த அளவுக்கு செய்வதை மீண்டும் செய்யாமல் போகிறாய், அப்போது நீ புதுப்புது வழிகளில் வாழ்வை தெரிந்து கொள்கிறாய்.

ஓஷோ

# ஆன்மாக்கள் மறுபிறவி எடுக்கின்றனவா?

செல்ஃப்ரியலைசேஷன் ஃபெலோஷிப் சர்வதேச தலைமையகம் லாஸ் ஏஞ்ஜலீஸ் கலிஃபோர்னியா, செப்டம்பர் 5, 1940ல் சொற்பொழிவு

குருதேவர் அருளுகிறார்:

"இன்றிரவு நமது தலைப்பு, ஆன்மாக்களின் மறுபிறவி என்பதாகும். நாம் ஏன் மறுபிறவி பற்றி ஆர்வம் கொள்ளவேண்டும்? கவலைப்படுவதற்கு ஓர் ஆயுட்காலம் போதுமானது இல்லையா? ஓர் அர்த்தத்தில் நாம் ஒரே ஒருமுறை மட்டும் வாழ்கின்றோம், என எண்ணுவது நல்லதாகும்.

மேலும் அது அவ்வாறு இருப்பின் நாம் நமது நேரத்தை விரையம் செய்யக்கூடாது. ஆனால் ஒவ்வொரு நிமிடத்தையும் ஆன்மீக வழியில் கம்பீரமாகவும் அழகாகவும் வாழவேண்டும். எந்தத் தனிமனிதரும் அதே மனிதனாக இருமுறை இப்பூமியில் பிறந்திருக்கவில்லை என்பது உண்மையே. இது இறைவனின் விருப்பங்களுக்கேற்றவாறு உள்ளது. மேலும் அவர் தொன்றுதொட்ட காலம் தொட்டே தனது கொள்கையை மாற்றிக்கொள்ளவில்லை.

ஷேக்ஸ்பியர், "கண்டுபிடிக்கப்படாத நாட்டின் எல்லையிலிருந்து ஒரு பயணியும் திரும்புவதில்லை" என எழுதியுள்ளார். நீங்கள் புறப்பட வேண்டும் என்ற விதியின் கரம் எழுதுகின்றவுடன், அந்தத் தீர்ப்பு இறுதியே. பிறகு நீங்கள் மறைந்துவிடுகின்றீர்கள். மேலும் உங்களுடைய தற்போதைய வடிவம் முடிவுறுகிறது. ஆகவே அந்த அர்த்தத்தில் திரும்பி வருதல் கிடையாது. ஏனெனில் உங்களின் முந்தைய பிறவியில் உங்கள் அடையாளம் எப்படியிருப்பினும் முன்பு நீங்கள் யாராக இருந்தீர்கள் என்ற ஞாபகமின்றி நீங்கள் வாழ்வை புதிதாகத் தொடங்குகிறீர்கள். நம் உணர்வுநிலை மீதுள்ள அந்த வரையறையின் காரணமாக, நாம் இந்த வாழ்வை தொடக்கமாகவும் முடிவாகவும் காண்கின்றோம்."

குருதேவர் மேலும் கூறுகிறார்: "நான் இந்து மதத்திற்கு மாறான ஒரு தத்துவத்தைப் போதிப்பதாக நீங்கள் காணலாம். ஆனால் நான் இறைவனின் படைப்பின் ஒப்பீட்டு நோக்கிலிருந்து உண்மையைப் பேசிக்கொண்டிருக்கிறேன். நான் இறைவனின் புத்தகத்திலிருந்து வாசிக்கின்றேன். மேலும் நான் உங்களிடம் அந்த நூல் நிலையத்திலிருந்து பேசுகின்றேன். இதுவே நான் என் குருதேவர் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரரிடமிருந்து கற்ற வழி மற்றும் அவர் தனது குரு லாஹிரிமகாசயரிடமிருந்து கற்ற வழியுமாகும்..

மீண்டும் ஒப்பீட்டளவில் பேசினால் நாம் ஒருமுறை மற்றும் பிறவி எடுக்கின்றோம் எனில், பின் நாம் இயற்கையில் ஒரு பேரழிவை ஏற்படுத்தும் நம்பிக்கையைத் தாக்கும் முறையை காண்கின்றோம். சில குழந்தைகள் இறந்தே பிறக்கின்றன. சில குழந்தைகள் சிறிது நேரம் மட்டுமே கழித்தபின் இறக்கின்றன. அனைத்து வயதினரும் துன்பம், நோய், இறப்பு ஆகியவற்றால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். வாழ்க்கையைப் பற்றிய உறுதிப்பாடு எதுவும் இல்லை. ஒவ்வொரு வருடமும் புதுவடிவ கார்கள் வெளிவரும்பொழுது சிலவற்றில் இயந்திரகுறைபாடுகள் உள்ளன. வாழ்க்கையும் கூட இதுபோன்றா? ஏதோ ஒரு வகையில் இயற்கையின் நடைமுறையில் சில ஆன்மாக்கள் உறுதியான, ஆரோக்கியமான உடல்களுடனும் மனங்களுடனும் உருவாக்கப்பட்டு, மற்றவை பலவீனமான உடல்களும் குறைபாடுள்ள மூளைகளும் அளிக்கப்பட்டு இருக்கின்றனவா? நாம் நமக்கு என்ன நேருகின்றது என்ற கட்டுப்பாடு இல்லாத வெறும் தொழிற்சாலை உற்பத்திப்பொருட்களா? இந்த வாழ்க்கையே தொடக்கமும் முடிவுமாக இருக்கிறதென்றால், பின்பு இது பயங்கரமான அநீதி என்று நான் கூறுகின்றேன். இது இரக்கமற்றது. நாம் இதுபோன்ற வாழ்க்கையை உருவாக்குகின்ற ஓர் இறைவனை எண்ணிப்பார்க்க விரும்பவில்லை. நாம் வெறும் சோதனைக்கு உட்படுத்தப்படும் மிருகங்களாக அவரது மனித சீமைபெருச்சாளி உள்ள இறைவனின் மிகப்பெரிய மிருகக்காட்சிசாலையாக மட்டும் இவ்வுலகு இருந்திருக்கும். இறைவன் வேண்டுமென்றே பெரிய திறமையுடனான மாதிரிகளையும் மற்றவர்களை அங்க குறைபாடுடனும் உருவாக்கியிருந்தால் பின் அதில் எந்த நியாமுமில்லை. மேலும் மதத்தால் ஒரு பயனுமில்லை. எதிர்காலத்தில் வாழ்க்கையின்றி, இந்த ஒரு வாழ்க்கை மட்டுமே என்றால், பின் நமது அந்த நேரத்தின் சுயநல ஆசைகளைத் திருப்திப்படுத்துவதற்கு அப்பால் எந்த முயற்சியை எடுப்பதிலும் அர்த்தமேதுமில்லை."



குருதேவர் கூறியதன் பொருள் என்னவென்றால், இறைவனின் படைப்பும் அதற்கேற்ப பிறப்பும் இறப்பும் அமைந்துள்ளதைப் பார்க்கும்போது மனித வாழ்க்கைக்கு எந்த அர்த்தமும் இல்லை. அதுதான் உண்மை. கொடுமையான இந்தப் பிறப்பும் இறப்பும் ஏற்படுவது மனிதனால் மட்டும்தான். மனிதன் அதை உணரவேண்டும்.

உணர்ந்தால் மட்டும் போதாது. பிறப்பு இறப்புகள் இல்லாமலிருக்கவேண்டுமென்றால் மனிதன்தான் அதற்காக முயற்சிசெய்யவேண்டும். ஆனால் அவை இல்லாமலிருக்கவும் முடியாது. இறைவனுடன் தொடர்புகொள்வதும் அவனை நேசிப்பதும்தான் ஒருவனின் உண்மையான பணியாக இருக்கவேண்டும். சுருங்கச் சொன்னால் மனித ஆத்மாக்கள் இறைஅனுபூதிபெற்று இறைவனை அடைந்தால் மட்டுமே ஒழிய பிறப்பும் இறப்பும் இல்லாமலிருக்காது. அது ஒரே நேரத்தில் சாத்தியமாகாது. அதற்காக நாம் ஒவ்வொருவரும் தியானத்தால் அவனை தொடர்புகொண்டு, அணுகி அவனிடத்தில் பணிந்து மன்றாடவேண்டும். அவ்வாறு செய்தால் அவனுடைய (இறைவனுடைய) மனம் இரங்க வாய்ப்புள்ளது. அதற்காக நானும், நமக்காக உள்ள பிரார்த்தனைகளை நறுமணமுடைய மாலையாகக் கோர்த்து அவன் கழுத்தில் அணிவிக்க உள்ளேன். என் பிரார்த்தனைகளுக்கு அவனுடைய கிரீடத்தில் பதிக்கப்பட்டுள்ள நவரத்தின கற்களிலிருந்து பிரதிபலிக்கும் பேரொளி எனக்கு அவனுடைய 'பதிலாக' வரும். நிச்சயமாக என்னுடைய பிரார்த்தனைகளுக்கு தெய்வத்தந்தை நல்ல பதிலினை அருள்வான்.

அதற்காக நான் என்னுடைய பிரார்த்தனையை துவக்குகின்றேன். "தெய்வத்தந்தையே, தாயே, பகவான் கிருஷ்ணா மகாவாதார் பாபாஜி, லாஹிரி மகாசயா, ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர்ஜி, அன்பே வடிவான குருதேவா, பரமஹம்ஸரே உங்கள் அனைவருக்கும் நாங்கள் தலைவணங்குகின்றோம்"

தெய்வத்தந்தையே! எங்கள் அனைவருக்கும் தாங்கள் தரிசனமளிக்கும்படி என் சார்பிலும், தங்கள் மற்ற அனைத்து குழந்தைகளின் சார்பிலும் இதயப்பூர்வமாக பிரார்த்தனை செய்கிறேன். எங்களுடைய தணியாத ஆர்வம் கொண்ட வேண்டுகோளை ஏற்றுக்கொள்வீர்; எங்களிடம் வாருங்கள்; எங்கள் முன் தோன்றுங்கள்!

அன்பிற்குரிய இறைவா! பிரபஞ்சத்தந்தையே! படைப்பின் அதிபதியே! அனைத்துலகின் அதிபதியே! தந்தையே! எங்களை தாங்களல்லவா படைத்தீர்கள்! ஒரு குழந்தையின்

37
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

தாய் தந்தையர், தம் குழந்தை பசியால் வாடும்போது அல்லது உலக வாழ்க்கையின் நிமித்தம் துன்பப்படும்பொழுது பார்த்துக் கொண்டிருப்பார்களா? உடனே அவர்களால் முடிந்த உதவியைச் செய்வார் களல்லவா! அதுபோலவே, தங்களின் அன்புக் குழந்தைகளான நாங்கள் ஒவ்வொரு நிமிடமும் இந்த வாழ்க்கையெனும் பெருங்கடலில் தத்தளித்துக்கொண்டிருப்பதை தாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களல்லவா! எங்கள் அன்பிற்குரிய தாயும் தந்தையுமான இறைவா! லோகாயத நாட்டங்கள் மற்றும் பந்த பாசங்களால் சம்சாரமெனும் பெருங்கடலில் மூழ்கி உயிரை விடும் முன் தாங்கள் வந்து கருணைகூர்ந்து எங்களைக் காப்பாற்றுவாய்!

அன்புத் தந்தையே! எனக்காக மட்டுமின்றி தங்களின் குழந்தைகள் அனைவருக்காகவும் நான் தங்களிடத்தில் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். அன்பான இறைவா! தங்களின் கருணையான பார்வை ஒன்றை எங்கள்மீது பொழியமாட்டீர்களா? தங்களின் கருணையான அருள்வெள்ளத்தில் எங்களை மிதக்கவைக்கமாட்டீர்களா? பொருளாசையினால் மற்றும் பல்வேறு ஆசைகளினால் தீயகுணங்களாகின்ற காம, குரோத, லோப, மோக, அகங்காரம், தற்பெருமை, பொறாமை மற்றும் சுயநலம் ஆகியவற்றால் மனிதமனம் அழுக்கடைகிறது. அதனால் பிறர் உடல், மனம், ஆத்மா இவற்றிற்குப் பாதகத்தை விளைவிக்கின்றவாறு மனம் வாக்கு, செயல் இவற்றால் சர்வசாதாரணமாக ஏராளமான தவறு களை இழைக்கும் சூழ்நிலைகள் தங்களின் குழந்தைகளுக்கு உருவாகிறது. மேலே கூறியுள்ள தீயகுணங்கள் வளராமலிருப்பதற்கு தங்களின் பேரன்பு எனும் அணைகட்டி தங்களின் பாதகமலங்களில் அர்ப்பணிப்பதற்காக பக்தியெனும் நறுமணமுடைய மலர்களை தங்களின் குழந்தைகளின் இதயங்களில் மலரச்செய்து, அமைதியெனும் தெளிந்த நீரை ஆத்மாக்கள்மேல் தெளித்து, ஆனந்தமெனும் மென்காற்றின் வழியாக தங்களின் அன்புகீதங்களைப் பாடியவண்ணம், தங்களின் தங்கக் கரங்களைப் பிடிப்பதற்காக வானம்பாடிபோல் பறந்துவந்து உமது சாம்ராஜ்யத்திற்குள் நுழைவதற்கு தங்களின் குழந்தைகளான எங்களை அனுமதிக்க மாட்டீர்களா? தாங்கள் அனுமதிக்கவில்லையெனில் மேலே கூறிய தீய குணங்கள் எனும் காட்டாற்று வெள்ளத்தால் அடித்து தங்களின் பேரன்பாகின்ற அணை உடைக்கப்பட்டுவிடும். அதற்காக, தங்களின் பேரன்பு, அமைதி மற்றும் ஆனந்தம் இவற்றால் கருணை கூர்ந்து தங்களின் திருவுள்ளப்படியே குழந்தைகளான எங்களின் ஆத்மாக்களின் பாதுகாப்புக்கான அணை கட்டுங்கள் என அன்புடன் வேண்டிக்கேட்டுக்கொள்கின்றேன். தங்களை நான் முழுமையாக நம்புகிறேன் இறைவா! தங்களின் குழந்தைகள் அனைவரும் என் சகோதரர்களே!

அன்புத் தந்தையே! பதவி, புகழ், பணம் இவற்றைத் தேடி திரும்பிப்பார்க்காமல் ஓடிக் கொண்டிருக்கும் தங்கள் குழந்தைகளை தடுத்து நிறுத்தி, தங்களைக் காணவேண்டும் என்று தீவிர ஏக்கத்துடன் தேடிக்கொண்டிருக்கும் குழந்தைகளின் கூட்டத்தில் சேர்க்கும்படி மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்பிற்குரிய இறைவா! நான் எனக்காகவும் பிறருக்காகவும் விரைந்து சென்று கொண்டிருக்கும் ஆன்மீகப்பாதையில் தங்களின் மற்ற குழந்தைகளை வரவழைப்பதற்காக, தங்களின் அன்பான, வாக்குத் தவறாத, உண்மை குழந்தையான குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரின் புனிதமானது மட்டுமின்றி தங்களின் குழந்தைகளின் இதயங்களை தூய்மைப்படுத்தி தங்களை (அன்பு இறைவனை) அங்கே பிரதிஷ்டை செய்வதற்கான மகோன்னதமான தெய்வீக போதனைகளை தங்களின் குழந்தைகள் இருக்குமிடமெல்லாம் பரவச்செய்து எல்லாக் குழந்தைகளுக்கும் அறிவித்து, அவை, அனைவரையும் சென்றடையவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன், தங்களின் அன்பைப் புரிந்துகொண்டு பணிபுரிகின்ற, தங்களால் நியமிக்கப்பட்டுள்ள தங்களின் அன்புக் குழந்தைகளை மனமிரங்கி, கருணைகூர்ந்து ஆதிரித்து தங்களின் திருவுள்ளப்படியே ஆசீர்வதித்து அருள்புரியவேண்டுகிறேன் இறைவா! தங்களின் குழந்தைகளை தங்களிடத்தில் சேர்ப்பதற்காகப் பணியாற்றுபவர்களுக்கும் தங்களை தேடுபவர்களுக்கும் தங்களுக்காக சேவை செய்பவர்களுக்கும் தாங்களே முன்வந்து அருள்வீர் என்று பூஜ்ய குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் கூறிக்கொண்டேயிருக்கிறார். இறைவா! இவ்வாறான தங்களின் பிரியமுள்ள குழந்தைகளான, மேலே கூறிய தங்களின் குழந்தைகள் தங்களிடத்தில் முழு நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். அது தங்களுக்கே தெரியும். அவர்களுக்கும் தங்களின் கனிவான பார்வையை பொழியுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்புக்குரிய தந்தையே! தங்கள் குழந்தைகள், இந்த அழிவுக்குரிய உலகப் பொருட்களுக்கும் அழுகிப்போகக்கூடிய உடலுக்கும் முக்கியத்துவம் கொடுத்தும் நிலையற்ற கனவு வாழ்விற்கு முன்னுரிமை கொடுத்தும் வாழ்ந்து வருகின்ற தங்கள் குழந்தைகள், உலகியலான பொருட்கள் மீது பேராசை கொண்டுள்ளதால் இறைவனால் அருளப்பட்ட தம் அறிவை இழந்து, என்றென்றும் உள்ளதும் சாசுவதமானதும் என்றும் புதிய ஆனந்தமான, பேரன்புடைய, அமைதியான, ஒளிச்சுடரான, எங்கும் நிறைந்த தந்தையான தங்களை (இறைவனை) மறக்கின்றனர். மறப்பது மட்டு மின்றி தங்களை புறக்கணித்த நிலையில் வாழுகின்றனர்.

இவ்வாறான நிலையில் வாழும் தங்களின் குழந்தைகளை, தங்களிடத்திலிருந்து பெயர்ந்து வந்தவரும் தங்களின் அவதாரமுமான பூஜ்ய குருதேவரின் போதனைகளை செவிமடுக்கச்செய்து, எங்களின் அன்பிற்குரிய தந்தையான தங்களை (இறைவனை) அறிந்துணர்வதற்கான விவேகத்தை பிரபஞ்சத்தந்தையாகின்ற தங்களிடமிருந்து பெற்று, வாழ்நாளை தங்களுக்காக அர்ப்பணித்தும் தங்களை அடைவதற்காகப் பயன்படுத்தியும் வாழும்படிச் செய்து, தங்களின் அனுபூதியைப் பெறுவதற்கு அவர்களை தகுதியுடையவர்களாக மாற்றும்படி என் அன்பிற்குரிய இறைவனை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். என் அன்புத் தந்தையே தாங்கள் என்னுடைய பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்வீர் என நான் நம்புகின்றேன்.

என் அன்பிற்குரிய தெய்வத்தாயே! ஒவ்வொரு நிமிடமும் அறிந்தோ அறியாமலோ தவறுகளை இழைத்துக்கொண்டிருக்கும் தங்களின் மற்றொரு வகையான குழந்தைகளுக்காக நான் தங்களிடத்தில் இதயப்பூர்வமாகப் பிரார்த்தனை செய்கிறேன்: அந்தக்குழந்தைகள் என்னுடன் இருப்பவர்களானாலும் சரி, என்னுடன் பிறந்தவர்களானாலும் சரி, என் உதரத்தில் மலர்ந்த மலர்களானாலும் அவர்கள் எவ்வளவு பெரிய தவறுகளைச் செய்திருந்தாலும் சரி, மற்றும் தங்களின் மற்ற குழந்தைகளானாலும் சரி, அவர்கள் அனைவர்களுடைய தவறுகளையும் கருணைகூர்ந்து மன்னித்தருளவும், மற்றும் அத்தகையதான தவறுகளைச் செய்யாமல் பாதுகாத்துக்கொள்வதற்காகவும், அவர்கள்மேல் தங்களின் கடைக்கண் பார்வையை எப்பொழுதும் வைத்துக்கொள்வதற்காகவும் மிகுந்த அன்புடனும் பணிவுடனும் தங்களின் பொற்பாத கமலங்களைப் பிடித்துக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பு அன்னையே! மேலே கூறப்பட்டுள்ள என் அன்பிற்குரியவர்கள் யாருக்கு எப்படிப்பட்ட பாவத்தைச் செய்தாலும், அல்லது பிறரிடத்தில் விரோத மனப்பான்மையுடன் இருந்தாலும், மனம் நோகும்படி கடிந்து பேசினாலும், கண்டபடி தூற்றியவாறு இருந்தாலும் அன்பு பாராட்டாமல், பகைமையுடன் இருந்தாலும் அன்பிற்குரிய இறைவா, தங்களின் குழந்தைகளில் யார் எந்தத் தவறை செய்திருந்தாலும், அவற்றை தங்களின் குழந்தைகள் செய்கின்ற தவறல்ல என்பதை எனக்கு தாங்கள் உணர்த் திக்கொண்டிருக்கிறீர்கள். “அவனன்றி ஓர் அணுவும் அசையாது” என்றிருக்கையில் அனைத்திற்கும் கர்த்தாவாக இருப்பது தங்களன்றோ இறைவா! அவ்வாறிருக்கையில் தவறுகளைச் செய்யவைப்பதும் தாங்கள்தானே இறைவா! அதையும் எனக்கு தாங்கள் நன்கு உணரவைக்கின்றீர்கள். ஆனால் தங்கள் குழந்தைகள் தண்டிக்கப்படுகிறார்கள்.

அதை மாற்றி அமைக்க இயலாதா? “அதுதான் என் திருவிளையாடல்” என்கிறீர்களா? உன் திருவிளையாடல் எதுவாக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் ஒரு தாய், தன் குழந்தைகளை மன்னிப்பதுபோன்று மன்னித்தருளுமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக்கேட்டுக்கொள்வதுடன், தீமையை விளைவிக்கின்ற மனப்பான்மை அனைத்தையும் அவர்களிடமிருந்து அறவே விலக்கி, அனைவரிடத்திலும் விருப்பு வெறுப்பின்றி, அன்பு பாராட்டும் வகையிலான மனப்பான்மையுடன் வாழ்வதற்கான விவேகத்தையும் அருளி, தம்மை ஆராய்ந்தும். அன்றாடம் தாம் செய்கின்ற தவறுகளை ஆராய்தும், சுயமாகச் சிந்தித்து தமக்கும் பிறருக்கும் பயனளிக்கும் வகையில் வாழ்வில் நல்ல முடிவுகளை எடுப்பதற்கான பகுத்தறிவினையும் அருளி, அவர்கள் அனைவரையும் தாங்கள் தங்களின் அருட்கரங்களை நீட்டி அவர்களுக்கு பிறப்பு இறப்பிலிருந்து விமோசனம் அருளி, ‘என்னிடம் வாருங்கள்’ என்றழைத்தவாறு அனைத்து குழந்தைகளையும் ஏற்றுக்கொள்வாய் தந்தையே! அனைவருடைய இதயங்களையும் பரிசுத்தமாக்கி பிறப்பும் இறப்பும் இல்லாததான நிலையில் தங்களுடன் மகிழ்ச்சியாகவும் ஆனந்தமாகவும் வாழட்டும் தந்தையே! அனைவரும் தங்களை உணரச்செய்வாய் இறைவா! தாங்கள் அனுமதித்தால் எல்லாம் நிறைவேறும்! அன்பு இறைவா! அனைவரையும் ஏற்றுக்கொள்வாய்! ஆசீர்வதிப்பாய்.! எங்கள் அனைவருடனும் தாங்கள் என்றென்றும் இருப்பாய்!!!

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909



# சித்தர்களும் கணித ஞானமும்

1. எதையும் "எண்ணியல்" அடிப்படையில் விளக்குகின்ற போக்கினை சித்தர்கள் மேற்கொண்டிருந்தார்கள் என்பது வியப்புகுறியது.
2. அவர்களுடைய "கணித அறிவுதான்" பல கலைகளையும், பல அறிவியல்களையும் வாழையடி வாழையாக வளர்ந்து வரச்செய்தன.
3. ஒன்பது கோள்களில் ஒவ்வொரு கோள் களுக்கும், "அண்டத்தின் மையத்திற்கும்" (Centre of cosmic universe).... அதாவது இம் மண்ணுலகின் (புவியின்) ஈரப்புச் சத்திக்கு அப்பாற்பட்டுள்ள கணக்கற்ற கோள்களாலும், நாள்களாலும் அமைந்ததே "ஒரு அண்டம்" என்று சொல்லப்படுவது.
4. அந்த அண்டத்தின் மையத்தினைக் கண்டு பிடித்து, அதனுடன் ஏழு கோள் களையும் தொடர்புபடுத்தி மிகத் தெளி வாக "வானியல்" அறிவியலை (Astronomy) வளர்த்துள்ளவர்கள் சித்தர்கள்.
5. இன்றுள்ள கணித அறிவுஞ் ஒன்று முதல் பத்து வரை ஒரு கணக்கை கண்டு பிடித்து, அதன் பின், அதன் பத்தின் மடங்குகளாக நூறு, ஆயிரம், லட்சம், கோடி என்று நன்கு எண்ணளவை (Numbers in Measurement) உபயோகப் படுத்தப்படுகின்றது.
6. ஞாயிறுக்கும் அண்டத்தின் மையத்திற்கும் இடையே உள்ள தூரம் சங்கு ஆள் தொலைவு.
7. அதாவது ஒரு அலகு "சங்கு" என்பது இன்று வழக்கிலுள்ள "கோடி கோடி ஆள் தொலைவு" என்று குறிக்கப்படுகின்றது.
8. திங்களுக்கும் அண்டத்தின் மையத்திற்கும் இடையே உள்ள தொலைவு 'மலை'.
9. இங்கு, "ஒரு கோடி சங்கு" தொலைவு "ஒரு மலை" என்று குறிப்புள்ளது.
10. இதைபோல்,
    - ❖ ஒரு கோடி மலை ஒரு குமுதம் என்றும்,
    - ❖ ஒரு கோடி குமுதம் ஒரு தாமரை என்றும்,
    - ❖ ஒரு கோடி தாமரை ஒரு நாடு என்றும்,
    - ❖ ஒரு கோடி நாடு ஒரு கடல் என்றும்,
    - ❖ ஒரு கோடி கடல் ஒரு வெள்ளம் என்றும் சித்தர்களால் அலகுகள் கண்டுபிடிக்கபட்டன.
11. இவை மேலே குறிப்பிட்டுள்ளது போல் அண்டத்தின் மையத்திற்கும், ஏழு கோள்களில் நடுவில் உள்ள தூரத்தை குறிக்க உதவுகின்றன.
    - ❖ செவ்வாயுக்கும் அண்டத்தின் மையத்திற்கும் இடையில் உள்ள தொலைவு "குமுதம் ஆள் தொலைவு" என்றும்,
    - ❖ புதனுக்கும் அண்டத்தின் மையத்திற் கும் இடையில் உள்ள துரம் "தாமரை ஆள் தொலைவு" என்றும்
    - ❖ வியாழனுக்கும் அண்டத்தின் மையத்திற்கும் இடையே உள்ள தூரம் "நாடு ஆள் தொலைவு" என்றும்,
    - ❖ வெள்ளிக்கும் அண்டத்தின் மையத் திற்கும் இடையே உள்ள தூரத்தை "கடல் ஆள் தூரம்"என்றும்,
    - ❖ சனிக்கும் அண்டத்தின் மையத் திற்கும் இடையில் உள்ள தூரம் "வெள்ளம் ஆள் தொலைவு" என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

அருளாட்சி திருச்சபை
08660446203

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033


ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 ஜூலை 2018 21
www.aanmeegamalar.com





ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033

♦♦♦

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033




# ருசி இல்லாத பொருள்களை மனிதன் அனுபவிக்க மாட்டான்

உணர்ச்சி. இதைப் பற்றியதே இக்கருத்து. உணர்ச்சியில்லாத மனிதன் குப்பையில் கிடக்கும் ஒரு பொருளுக்கு சமம். ஆனால் இந்த உணர்ச்சியை மனிதன் எப்பொழுது உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று யோசித்துக் கொள்ள வேண்டும் தெரியுமா? சுகபோகங்களை அனுபவிக்கும் பொழுது மட்டுமே உணர்ச்சிகளை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அப்பொழுது உணர்ச்சி இல்லையென்றும் மனிதன் சாப்பிடக்கூடிய பொருள்களுக்கெல்லாம் ருசி இருக்காது. அல்லது ருசி இருந்தாலும் ருசி தெரியாது.

ருசி இல்லாத பொருள்களை மனிதன் அனுபவிக்க மாட்டான் இதுவே மனிதனின் சிந்தனை. பொருள்களில் ருசி இருந்து அனுபவிக்கும் மனிதனிடம் அந்த உணர்வு இல்லையென்றால் அவனுக்கு வியாதி என்று பொருள். இக்கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டு நடந்த சில மாதங்களுக்கு முன் இந்தியாவில் நடந்து முடிந்த அரசியலை எண்ணிப் பார்.

அரசியல் பொருளாதாரம் போன்ற கருத்துக்கள் எல்லாம் சிந்தனை செய்வதற்கு உரிய கருத்துக்களே உணச்சி வசப் படக் கூடிய கருத்துக்கள் அல்ல.

அதனால் அவைகளுக்கு கொள்கைகள் என்று பெயர். இப்பொழுது நான் சொல்லுவதை வைத்துக் கொண்டு சிந்தி.

அரசியலிலே 'கொள்கை அரசியல்' என்றும் உணர்ச்சி அரசியல் என்றும் இரண்டு வகை உண்டு. அரசியல் துறை சிந்தனை செய்ய வேண்டிய துறையே. அதனால் நாட்டில் அனைவரும் கொள்கை அரசியலையே நடத்த வேண்டும். அரசியலை சாப்பிட முடியுமா? முடியாது என்பதால் அந்த இடத்தில் உணர்ச்சி அரசியலை நடத்தக் கூடாது. கொள்கை அரசியலையே நடத்த வேண்டும்.

கடந்த காலத்தில் ஒரு சிலர் என்ன பாவத்தை செய்தார்கள்? யோசித்துப் பார். முன்னேற்ற வாழ்க்கைக்காக கமிஷன் அறிக்கை பிரச்சினை என்றும் பல பிரச்சினைகளை உணர்ச்சி அரசியலாக நடத்தினார்கள். ஆங்கிலத்தில் அதற்கு 'இஷ்யூ பேஸ்டு பாலிடிக்ஸ்' என்று முலாம் பூசினார்கள்.

இறைவன் தந்த முடிவு என்ன? நாட்டில் குழப்பமே மிஞ்சியது. நல்ல மனிதர்கள் பிரச்சினைகளை தீர்க்கும் முறையையே யோசிப்பார்கள். பிரச்சினையைத் தீர்க்கவிடாமல் உணர்ச்சி அரசியலையே தொடர்ந்து நடத்தினால் அந்த மனிதன் நல்லவன் அல்ல என்பதை வீரர்கள் உணர வேண்டும். இது சிந்தனைக்கு உரிய ஒரு சிந்தனை என்று அறி.

மனிதன் தனது மூளையைக் கொண்டு சிந்திக்கின்ற சிந்தனைக்கு எல்லாம் கொள்கையே உடம்பு. உணர்ச்சி அதற்கு அங்கமல்ல. இந்தியாவில் துரதிர்ஷ்டவசமாக பல மொழி, மதம், இனம் இன்ன பிற கொள்கைகளுக்கெல்லாம் கொள்கையை வகுத்து அரசியலைக் காண்பதில்லை. உணர்ச்சியை வகுத்து கொள்கையைப் பார்க்க முடியாமல் தவிக்கிறார்கள். வீரனே இதுதான் கெள்கையின் தத்துவம்.

இன்றைய தினம் மக்கள் நாட்டு நடப்பிற்கு கொள்கை வேண்டுமா? உணர்ச்சி வேண்டுமா என்று யோசிக்க வேண்டும். யோசித்தால் அனைவரும் வலிமை பெறுவார்கள்.

(பூஜ்ய ஸ்ரீ ஞானச்சேரி மஹான் அருளிய "நேருக்கு நேர்" என்ற நூலிலிருந்து)



## ஞானிகளின் பொன்மொழிகள்...

கடவுளை தெரிந்து கொள்ள விருப்பம் இருந்தால் குரு கிடைத்துவிடுவார்.

நேசம் என்பது அற்புதமான கொள்கை. அறிவு என்பது நேசத்தைப் பற்றி அற்புதமாக எடுத்துச் சொல்லும். ஆனால் நேசத்தை அறிவு அனுபவிக்காது.

காசு இருப்பதனால் தான் மனிதன் உலகை நேசிக்கிறான்.

பூஜை செய்து பக்தியையும், பக்தி செய்து ஞானத்தையும் பெற முடியும்.

மாயை என்பது வெற்றிக்கு போடும் முட்டுக்கட்டை.

வினைக்கு காரணம் தெரிந்தால் ஞானம் வரும்.

மனம் என்ற உறுப்புக்கு கடவுளைப் பார்க்கும் திறமை உள்ளது.

நமது எழுத்துக்கள் எதிர்காலத்தையும், சில பல மனிதர்களையும் பாழ்படுத்தினால் அது எழுத்தாளனுக்கு கிடைக்கின்ற பாபம்.

ஒரு தரம் சாப்பிட்டால் போதும் என்று எவராவது திருப்தி கொள்வாரா? தினம் தினம் சாப்பிடுகிற மாதிரி மறுபடியும் மறுபடியும் இறைவனை நினை.

அருள் பிறந்ததற்கு அனுபவம் காட்ட வேண்டும் என்றால் பகவானை நினைப்பவர்கள் கருத்துக்களை வித்துக்களால் பிறப்பிப்பார்கள்.

குணத்தினால் மட்டுமே உலகம் வளர்ச்சி அடைகிறது.

இறைவனைப் பற்றி பேசுவதும், இறைவனைத் துதிப்பதும் இப்படித்தான் இறையருளை பெறுவதற்கு மனதை கொடுக்க வேண்டும்.

– ஞானச்சேரி ஞானிகள் –

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# "ஆ(ம)ஹா பாரதம்"

பாகம் 22

சௌனகரின் கேள்வியான "கத்ருவின் சாபத்திற்கு ஆளான நாகங்கள் என்ன செய்தன" என்பதற்கான பதிலை சூதர் சொல்லத் துவங்கினார்.

நாகங்களில் சிறந்தவரான சேஷநாகர் தன் சகோதரர்களை விட்டு நீங்கி தனியேச் சென்று தவம் புரியலானார். எவ்வித ஆகாரமுமின்றி காற்றை மட்டுமே சுவாசித்துக் கொண்டு தவம் புரிந்ததால் உடல் வற்றிப் போனது. அவரது தவத்தைக் கண்ட பிரும்மா" மக்களுக்கு நன்மை செய்ய வேண்டிய நீ ஏன் இப்படி கடுமையாக தவம் புரிகிறாய். உன்னால் மக்கள் மிகவும் தாபப்படுகிறார்கள். உனக்கு என்ன வேண்டும் கேள்" என்றதும். சேஷ நாகர் கூறியது.

பிரம்மதேவனே! மந்த புத்தி படைத்த என் சகோதரர்களோடு நான் சேர்ந்திருக்க விரும்பவில்லை. எப்போதும் குற்றம் சாட்டுவதையே குணமாகக் கொண்டுள்ளனர். தந்தை கச்யபரின் வரத்தால் மகாபலசாலியான கருடனும் எங்கள் சகோதரன்தானே! அவர்களின் சந்தோஷத்தை கண்டு சகிக்க முடியாதவர்களாகி விட்டார்கள் என் சகோதரர்கள். ஆதலால் மரணமே சம்பவித்தாலும் இந்த துஷ்டர்களின் சகவாசம் வேண்டாம் என்பதற்கே நான் தனித்து வந்து தவம் புரிகிறேன். நீங்களே இதை ஆலோசித்து, ஆமோதியுங்கள் என்றார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த பிரும்மா "நீ கூறியவை மிகவும் உண்மையே. ஆனாலும் நீ உன் சகோதரர்களை எண்ணிக் கவலைப்படாதே. உன் தாயின் சாபத்திற்கு உன் சகோதரர்கள் மிகவும் பயந்து போயுள்ளனர். இருப்பினும் அதற்கும் சேர்த்தே நான் ஏற்கனவே பரிகாரத்தை ஏற்படுத்தியுள்ளேன். நீ உனக்குரிய விருப்பத்தைக் கேட்டு பெற்றுக் கொள். உன் மீது கொண்ட அன்பின் காரணமாய் நான் வரத்தைக் கொடுத்தேத் தீருவேன். இதை கவனியுங்கள்.



மாதா, பிதா, குரு, தெய்வம் நம் வணக்கத்திற்கு உரியவர்கள் என்று நம் முன்னோர்கள் சொன்னதை நாம் அப்படியே நடைமுறைப்படுத்தி வருகிறோம். இதில் தாய்க்குத் தான் முதலிடம். தாயிற்ச்சிறந்த கோயிலுமில்லை என்றெல்லாம் நாம் அவளுக்குத் தரும் மதிப்பு கூடி நிற்கிறது.

ஆனால் இங்கு தாயே அதர்மத்திற்கான பாதையை காட்டி அதற்குள்ளே வாருங்கள் என்று அழைப்பு விடுக்கிறாள். இப்போது யார் பேச்சைக் கேட்பது?

சொல்வது தாயாக இருந்தாலும் அதில் தர்மமில்லை என்று தெரிந்து விட்டால், தாயிடமிருந்து விலகிச் சென்று விடலாமேத் தவிர தர்மத்திடமிருந்து விலகி விடக் கூடாது என்பதற்கு சேஷநாகர் ஒரு வழியை நமக்கு காட்டுவதோடு கூடவே மற்றொன்றையும் சுட்டு கிறார்.

அதர்மத்திற்கு ஆதரவாக செயல்படாத பிள்ளைகள் மீது (ஒருக்கால்) தாயின் சாபம் விழுமேயானால். அப்போது அப்பிள்ளைகளை காப்பது தர்மத்தின் காவலனான இறைவனின் பொறுப்பே என்று.

இனி, நாகராஜனே! நான்கூறுவதைக் கேள்.உன் அறிவு தர்மத்தில் நாட்டம் கொண்டுள்ளது. இது உன் பாக்கியம் தான். நீ மேலும் அதில் ஈடுபட ஆசி கூறுகிறேன் பிரும்மா.

தேவா! நீர் கூறியபடியே என் அறிவு எப்போதும் தர்மத்திலும், அடக்கத்திலும், தவத்திலுமே ஈடுபட்டிருக்கும்படி அருள் புரியுங்கள். இதுவே நான் கோரும் வரமும், விருப்பமும் ஆகும் சேஷநாகன்.

நாகராஜா! நீ விரும்பும் வரத்தினால் நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன். மக்களின் நன்மைக்காக நான் கூறுவதைக் கேள். காடு, மலை, நகரம், கடலோடு கூடிய இந்த பூமியானது அடிக்கடி அசைந்துக் கொண்டே இருக்கிறது. இது அசை யாது இருக்கும் படி நீ இதை உன் தலையில் தரித்துக் கொள்ள வேண்டும் பிரும்மா.

பிரஜாபதியே ! நீர் கூறியபடியே செய்கிறேன். தங்களின் ஆணைப்படி இதை அசையாதவாறு என் தலையில் தரிக்கிறேன். தாங்களே இதை என் தலையில் வைத்து விடுங்கள் சேஷநாகன்.

நாகராஜா ! நீ பூமியின் கீழ் நோக்கி செல். அது நீ செல்வதற்கு தானே வழி விடும். நீ இதைத் தரித்தால் எனக்கு விருப்பமான காரியத்தை செய்தவனாவாய் பிரும்மா.

சௌனகரே! பிரும்ம தேவனின் ஆணையைத் தன் தலைமேல் தாங்கியதோடு, பூமிக் குகைக்குள் சென்று கடல் சூழ்ந்த பூமிதேவியை . அசையாமல் நிலைத்திருக்கும்படி தன் தலை மீது தரித்துக் கொண்டார் சூதர் .



நாகங்களில் சிறந்த சேஷா! உன் எண்ணற்ற படங்களால் இந்த பூமியை தனியாகவே பிடித்து என்னை போலும் (அ) இந்திரனைப் போலும் தரித்து உள்ளாய் பிரும்மா.

இவ்வண்ணம் பிரும்ம தேவன் ஆணைப்படி அனந்தன் இந்த உலகம் முழுவதையும் தரித்துக் கொண்டு பூமிக்குக் கீழேயுள்ள பாதாள லோகத்தில் வசித்து வருகிறார். சேஷனுக்கு உதவி செய்வதற்காக கருடனை நியமித்தார்.

சேஷ நாகர் சென்று விட்டப் பிறகு நாகங்கள் வாசுகியை நாகராஜ பதவியில் வைத்து, தேவர்கள் இந்திரனுக்கு தேவராஜ பதவியில் வைத்து அபிஷேகம் செய்வதைப் போன்று, வாசுகிக்கு அபிஷேகம் செய்வித்தன.

சேஷ நாகருக்குப் பிறகு உள்ள வாசுகியே நகராஜ பதவியில் இப்போது இருப்பதால் மற்ற நாகங்கள் ஒன்று கூடி தாயின் சாபத்திலிருந்து தப்புவது எப்படி என்பது பற்றிய ஆலோசனை நிகழ்ந்தது. அதில் வாசுகி கூறியது.

தாயின் சாபத்திலிருந்து நாம் தப்பிக்க வேண்டும். மற்ற சாபங்களுக்கு பதில் உண்டு. தாயின் சாபத்திற்கு பதில் கிடையாது. அதிலும் இந்த சாபத்தை பிரும்மாவின் எதிரிலேயே நாம் தாய் விட்டிருக்கிறாள். அதை அவரும் தடுக்காமல் இருந்தது மேலும் கவலையளிக்கிறது.

நாம் மிகுந்த திறமையுடைவர்கள். எனவே காலத்தை வீணாக்காமல் இதிலிருந்து தப்பித்துச் செல்வதற்கான வழியை நாம் ஒற்றுமையாகச் சேர்ந்து தேடி உடனடியாக தீர்வு காண வேண்டும்.

முன்பு ஒரு சமயம் தேவர்கள் அக்னியை மலைக்குகையில் கண்டது போன்ற உபாயத்தை நாமும் கண்டுபிடித்து, ஜனமேஜயனின் சர்ப்பயாகத்தை நிறைவேறாமல் தடுத்திடுவோம்.

தாயின் சாபத்திற்கு மாற்று கிடையாது என்று சொல்லும் வாசுகியே அதை மாற்றுவதற்கான உபாயத்தை தேட வேண்டும் என்று சொல்வதை கவனியுங்கள்.

தாய் அதர்மத்தை போதிக்கிறாள். அதனால் அந்த சாபம் நம்மை துன்புறுத்தாது, என்பது நன்கு தெரிந்திருந்தாலும் அதை முறியடிக்கும் உபாயத்தை தேடுவதற்கான காரணம்; விதிவசத்தால் நம் மீது ஒரு கெடுதல் வந்து விழத்தான் போகிறது என்றுத் தெரிந்து விட்டால், உடனே முடங்கிப் போய் விடாமல் அதை சமாளிப்பதற்கான ஆயத்தப் பணியைச்

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

செய்து கொள்ளத்தான் வேண்டுமேத் தவிர முயற்ச்சியை நாம் விட்டு விடக் கூடாது.

வாசுகி மற்ற சர்ப்பங்களின் கருத்தை கேட்க ஒவ்வொன்றும் ஒவ்வொகு உபாயத்தைச் சொல்லத் துவங்கின. இந்த யாகத்தை உடனே நிறுத்து என்று ஜனமேஜயனிடம் நாமே நேரில் சென்று கேட்போம்

ஆலோசனைக் கூட்டம் என்பதால் ஆளுக்கொரு கருத்தை தெரிவித்தனர். ஜனமேஜயனிடம் பிராம்மண வேஷத்துடன் சென்று யாகத்தை நிறுத்தும்படி சொல்லலாம். அவனுக்கு மந்திரியாகி, ஆலோசனை கேட்கும் போது யாகத்தை நிறுத்தி விடலாம். யாகத்தின் விதி அறிந்து மன்னனுக்கு நன்மை செய்ய யாகம் புரிய வரும் ஆச்சாரியனைத் தீண்டி விடலாம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்த நாகங்களைப் பார்த்து தர்ம புத்தி கொண்ட சில நாகங்கள் அப்படியெல்லாம் செய்யக் கூடாது மற்றும் ஆபத்து வரும் போது அனுகூலமான வழிகளே நமக்கு அமைதியைத் தரும். ஒரு ஆபத்திலிருந்து தப்புவதற்கு மற்றொரு ஆபத்தைத் தேடக்கூடாது என்று தெரிவித்ததும் வேறு சில நாகங்கள் ஜனமேஜயனையேத் தீண்டி விடலாம். நம் காரியம் அனைத்தும் நிறைவேறி விடும் என்று பேசின. இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வாசுகி " நீங்கள் சொல்வது எதுவும் நடைமுறைக்கு ஒத்து வராத செயல்களே. நான் சொல்வதை கேளுங்கள். உங்களது நன்மை தீமையில் அதிகம் பங்கு கொள்ள வேண்டிய பொறுப்பில் இருக்கும் என் சொல்லைக் கேளுங்கள். நாம் அனைவரும் நமது தந்தையான கச்சயபரையே நாடுவோம்" என்றது.

அதற்குள் எலாபத்ரன் என்ற நாகம்" எல்லோரும் நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த யாகம் நடைபெறாமல் போவதோ, ஜனமேஜயனின் உயிருக்கு தீங்கு நேருவதோ நடக்காத விஷயம்.

தெய்வத்தால் தீங்கு ஏற்பட்டால் தெய்வத்தின் மூலமே நாம் அதை தீர்த்துக் கொள்ள முயல வேண்டும். நமது துன்பம் தெய்வத்தால் நேர்ந்தது' நமது தாயார் நமக்கு சாபம் இடும் போது நான் தாயின் மடியில் ஏறிக் கொண்டேன்.

அச்சமயம் பிரம்ம தேவனிடம் வந்திருந்த தேவர்களிடமிருந்து "இந்த பெண்கள் மிகவும் கடுமையானவர்கள் "எனும் குரல் கேட்டது. மற்றும் "தேவனே! கத்ரூவைப் போன்ற பெண்ணைத் தவிர வேறு யாரால் தன் சொந்த பிள்ளைகளை சபிக்க முடியும்? இந்தக் கொடிய இயல்பு இவளிடத்தில் தான் இருக்கிறது. தாங்களும் இதைப் பார்த்துக் கொண்டு இருப்பது எங்களுக்கு மேலும் அச்சத்தை விளைவிக்கிறது. அவளைத் தடுக்காததற்கு என்ன காரணம்? தயவு செய்து சொல்லவும் என்று கேட்டனர்" அதற்கு பிரும்ம தேவன் கூறியது.

பிரும்மா கூறியதை அறிய ஆர்வம் இருக்கட்டும்.

அடுத்த இதழில்....

- **Thali**, Ph:09786223577

மற்றவர்களும் பயன்பெற அறிமுகப் படுத்துங்கள்....

அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நமது இதழை உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்களும் படித்து பயன்பெற, அவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

நமது இதழில் நிறை குறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை கீழ்காணும் தொலைபேசி எண் மற்றும் வாட்சப் எண் மற்றும் இ-மெயில் முகவரியிலும் தெரியப்படுத்தலாம்

**whatsapp: 8825844033**

**aanmeegamalar@gmail.com**





# சான்றோரின் லக்ஷணங்கள்

- கெட்டவர்கள் உள்ள கிராமத்தில் குடியிருத்தல், சுவையில்லாத உணவு, எரிந்து விழும் மனைவி, முட்டாளான மகன் ஆகிய இவையாவும் ஒரு மனிதனுடைய உடம்பை நெருப்பு இல்லாமலே எரித்து விடுகின்றன.
- பால் கறவை அற்றுப் போன ஒரு மலட்டுப் பசுமாடு எப்படி உபயோகம் அற்றதோ அதேபோல கல்வியும், தெய்வ பக்தியும் இல்லாத மகனால் எந்த உபயோகமும் இருக்கப் போவதில்லை!
- ஒரு சந்திரன் இருளைப் போக்குகிறது. ஆனால் நக்ஷத்திரங்கள் ஆயிரமிருந்தும் இருளைப் போக்க முடியாது. அது போல நூறு குணமில்லாத மகன்களை விட ஒரு குணமுள்ள மகன் மேலானவன் ஆவான்.
- ஒருவனாக இருந்து தனிமையில் ஜபம் செய்வது நல்லது.
- இருவராகச் சேர்ந்து படிப்பது உதவும்.
- மூவராகச் சேர்ந்து பாடுவது சிறக்கும்.
- நால்வர் சேர்ந்து வெளியில் செல்வது மகிழ்ச்சிகு உதவும்.
- ஐந்து பேர் சேர்ந்து க்ஷேத்ரங்களுக்கு யாத்திரை செல்வது துணை பயக்கும்.
- போரென்று வரும்போது பலர் சேர்வது நலம் பயக்கும்.
- தெய்வ பக்தி உள்ளவளும், வீட்டு வேலைகளில் திறமைசாலியும், கற்பு உள்ளவளுமே உயர்ந்த மனைவி!
- தர்மத்தில் பற்று, பேச்சில் இனிமை, தானம் கொடுப்பதில் உற்சாகம், நண்பனிடம் நேர்மை, குருவிடம் பணிவு, உள்ளத்தில் கம்பீரம், நடத்தையில் சுத்தம், நற்குணங்களுக்கு மதிப்பு, சாஸ்திரங்களில் தேர்ச்சி, உருவத்தில் அழகும், சிவனிடத்தில் பக்தி இவை எல்லாம் சான்றோரின் லக்ஷணங்கள் ஆகும்.

– சாணக்கியர்



# கடனிலிருந்து மீள உதவும் பைரவ வழிபாடு

முற்பிறப்பு கர்மாக்கள் அல்லது கவனக்குறைவு அல்லது ஏழரைச்சனி / அஷ்டமச்சனி அல்லது அளவற்ற கருணையால் தவறான ஆட்களுக்கு ஜாமீன் ஏற்றல், குடும்பப் பொறுப்பை தன் மீது சுமத்திக் கொள்ளுதல் போன்றவற்றாலும், வேறு பல சொல்லமுடியாத காரணங்களாலும் தனி மனிதர்கள் கடன் என்ற மோகினியிடம் சிக்கிக் கொள்கின்றனர்;

பலவிதமான பரிகாரங்கள், வழிபாடுகள் செய்தாலும் கடன் குறைவதற்கான வழிகளே தெரியவில்லை; என்றும் தெரிவிக் கின்றனர்;

ருணவிமோசன வழிபாடுகள் செய்தும் தீரவில்லை எனில் கடுமை யான கர்மவினையால் இந்தக் கடன்கள் நமக்கு உருவாகியிருக்கிறது என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த பைரவ பரிகாரத்தைச் செய்ய விரும்பு வோர் முதலில் அசை வம் சாப்பிடுவதையும், மது அருந்துவதையும் நிரந்தரமாகக் கைவிட வேண்டும்;

ஏனெனில், தினமும் மது அருந்துபவர்களின் ஜாதகம் இயங்காது;

அடிக்கடி அசைவம் சாப்பிடு பவர்களின் இறைவழிபாடு அவர் களுக்கே பலன்கள் தருவதில்லை;

யாருக்கு கடன் இருக்கிறதோ அவர்கள் தமது பழைய பனியன்/வேட்டியை எடுத்துக் கொள்ள வேண்டும்;

(கணவனின் கடன் தீர மனைவி இந்த வழி பாட்டைச் செய்யலாம்; அப்பா சார்பாக மகளோ, சகோதரன் சார்பாக சகோதரியோ இதைச் செய்யக் கூடாது.

நண்பனுக்காக பெண் தோழியோ இதைச் செய்யக் கூடாது; தனித்து வாழும் ஆண்கள் தாமாகவே செய்ய வேண்டும்)

நீண்டகாலமாக பயன்படுத்திய பனியன்/ வேட்டியை சுத்தமாக்கிக் கொள்ள வேண்டும்; (துவைத்து காய வைத்தப்பின்னர் இதைச் செயல்படுத்தவும்) பத்து செண்டிமீட்டர் நீளமும் பத்து செண்டிமீட்டர் அகலமும் உடைய 16 சம சதுரத் துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

கூடவே, கறுப்பு நூல்கண்டு ஒன்றும் கொஞ்சம் மிளகும் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்; (சமையலறையில் இருக்கும் மிளகைப் பயன்படுத்தக்கூடாது; தனியாக கடையில் வாங்கிக் கொள்வது அவசியம்)



ஒரு சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மேல் 8 மணிக்குள் இந்த 16 சம சதுரத் துண்டு களில் இரண்டை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்;

அதில் ஒவ்வொன்றிலும் 27 மிளகுகளை வைத்து கறுப்பு நூலால் கட்டிக் கொள்ள வேண்டும்; ஒரு தேங்காய் வாங்கி, அதை உடைத்துவிட்டு, உள்பகுதியில் ஈரமில்லாமல் துடைத்து வைத்துக் கொண்டு தேங்காயின் உள்பகுதியில் இந்த 27மிளகுகளைக் கொண்ட கறுப்புநூலால் கட்டப்பட்ட சிறுபொட்டலத்தை வைக்க வேண்டும்.

அதன் பிறகு சுத்தமான நல்லெண்ணையில் அந்த மிளகு பொட்டலத்தை ஒரு பெரிய பிளாஸ் டிக் டப்பாவில் ஊறவைத்து கொள்ளவும். அந்த பொட்டலத்தைல் இருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து கொண்டு கொஞ்சம் இரு தீபத்திற்க்கு தேவையான என்னையை எடுத்து கொண்டு கோவிலுக்கு சென்று பரிகாரத்தை செய்து கொள்ளவும்.

ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தேங்காய் மூடியினுள் (உள்ளே தேங்காய் இருக்கவேண்டும்) வைத்து, அந்த தேங் காயில் சுத்தமான நல்லெண்ணெயை ஊற்ற வேண்டும்.

பைரவப் பெருமானின் சன்னிதியில்,இந்த தேங்காய்த் துண்டுகளை பைரவப்பெருமானின் முன்பாக வைக்க வேண்டும்; (சில கோவில்களில் பைரவரின் முன்பாக வைக்க அனுமதிப்பதில்லை; அவர் இருக்கும் பகுதியில் எந்த இடத்தில் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்) வைக்கும்போது அங்கே இருக்கும் காலியான அகல்விளக்கின் (இல்லாவிட்டால் கடையில் வாங்கி வரவும்) மீது தேங்காயின் கூர்மையான கீழ்ப்பகுதி இருப்பது போல நிலைநிறுத்திவைக்க வேண்டும்;

பைரவப் பெருமானிடம் மனப்பூர்வமாக தனது கடன்கள் விரைவாக தீர வேண்டும் என்று வேண்டிக் கொண்டு இந்த இரண்டு தேங்காய்களிலும் இருக்கும் மிளகுப் பொட்டலத்தை உள்ளே போட்டு விட்டு தீபமேற்ற வேண்டும்.

தீபம் ஏற்றும் போது தனியாக வெள்ளை நூல் திரி போட்டு தான் தீபம் ஏற்ற வேண்டும் தீபம் ஏற்றிய பிறகு தீபத்தின் அருகிலே அமர்ந்து கொண்டு உங்கள் பிரார்தனைகளை செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டு மிளகு பொட்டலம் எரியாதவாரு பார்த்து கொள்ளவும்.

இது போல தொடர்ந்து எட்டு சனிக்கிழமை களுக்கு செய்ய வேண்டும். தீட்டு, வேலைப்பளு போன்ற காரணங்களால் தொடர்ந்து எட்டு சனிக்கிழமைகள் செய்ய முடியாத நிலை வந்தாலும், விட்டுவிட்டாவது எட்டே எட்டு சனிக் கிழமைகள் மட்டும் இம்மாதிரியான வழிபாடு செய்ய வேண்டும்.

எட்டாவது சனிக்கிழமை நிறைவடைந்தது முதல் 90 நாட்களுக்குள் எவ்வளவு பெரிய கடன் தொகையாக இருந்தாலும் அவை தீர எதிர்பாராத உதவியை பைரவப் பெருமான் அருளுவார்;

கடந்த 25 ஆண்டுகளாக இந்த சுயபரிகார முறையைப் பின்பற்றி ஏராளமானவர்கள் தமது கடன்களில் இருந்து மீண்டிருக்கின்றனர்.

தனித்து வாழ்ந்து வரும் பெண்கள் தமது சக்திக்கு மீறிய கடன்களில் சிக்கியிருந்தால் கடையில் கிடைக்கும் கைத்தறி காடாத் துணியை வாங்கி அதில் மேலே கூறியது போல 27 மிளகு வைத்து வழிபாடு செய்ய கடன்கள் தீரும்.

ஓம் ஹ்ரீம் மஹாபைரவாய நமஹ

– மு.கிருஷ்ணமோகன்
ஸ்ரீ காலபைரவி ஜோதிட நிலையம்
தொ.பே.எண்: 08526223399

# பெண் குழந்தை பெற்றவரா?

## கன்னிகாதானத்தால் 21 தலைமுறையை கரையேற்றும் வரம் பெற்றவர்கள் நீங்கள்

தானத்தைப் பற்றி பல்வேறு வழிகளில் பல்வேறு தரப்பினர் பல தகவல்களை கொடுத்திருக்கின்றனர். அந்தவகையில், வயிற்றுப்பசியைப் போக்குகிற அன்னதானமே சிறந்தது என்று சொல்வார்கள். நிதானமே சிறந்தது என்பவர்களும் உண்டு. ஆனால், தானங்களிலேயே மிகப் பெரியதாக, மகா தானமாக சாஸ்திரம் குறிப்பிடுவது கன்னிகாதானத்தைதான்!

திருமணம் செய்துவைக்கும்போது, தந்தையானவர் தான் பெற்ற பெண்ணை மற்றொரு குடும்பத்தில் பிறந்த ஆண்மகனுக்கு தானமாக அளித்து அவனிடம் ஒப்படைக்கும் இந்த நிகழ்வையே கன்யாதானம் அல்லது கன்னிகாதானம் என்கிறார்கள்!



இந்த உலகில் பலவித தானங்கள் செய்யப்பட்டாலும் அவை எல்லாவற்றிலும் உயர்ந்தது இந்த கன்னிகாதானமே என்பதற்கு இந்த நிகழ்வின்போது சொல்லப்படுகிற சங்கல்பமும், மந்திரமுமே சாட்சி. ‘தசானாம்பூர்வேஷாம், தசானாம்பரேஷாம், மமஆத்மனஸ்ச ஏக விம்சதிகுல உத்தாரண..’ என்று அந்த மந்திரம் நீள்கிறது. அதாவது இதன் முழு விளக்கம் என்னவென்றால், “கன்யாதானம் செய்பவனுக்கு முன்னால் உள்ள பத்து தலைமுறையும், பின்னால் வருகிற பத்து தலைமுறையும், கன்யாதானம் செய்பவனது தலைமுறையையும் சேர்த்து ஆகமொத்தம் இருபத்தியோரு தலைமுறைகளையும் கரைசேர்க்கும் சக்தி பெற்ற கன்னிகாதானம். இவ்வளவு சக்தி வாய்ந்த மகத்தான இந்த மகாதானத்தைச் நான் செய்கிறேன்” என்பது மேற்கண்ட மந்திரத்தின் பொருள்.

உன் வம்சவிருத்திக்காக எம்குல விளக்கை உனக்கு தானமாக அளிக்கிறேன் என்று ஒரு தந்தை செய்யக் கூடிய கன்னிகாதானமே உலகில் அளிக்கப்படுகின்ற தானங்களில் மிகப்பெரியது என்று சாஸ்திரம் போற்றுகிறது.

ஆண்பிள்ளையைப் பெற்றால் அந்தப் பிள்ளை செய்கிற கர்மாவின் மூலம் அந்த ஒரு தலைமுறை மட்டுமே கரையேறும். ஆண்பிள்ளைக்கு குடும்பத்தை ஆளுகின்ற திறமையும், பெரியவர்களை காக்கின்ற சக்தியும் ஊட்டி வளர்க்கப்பட வேண்டும். அவ்வாறு செயற்படாத ஆண் பிள்ளைகள் ஆண்மை என்றழைக்கப்படும் உயரிய பண்பை இழந்தவர்களாகவே கருதப்படும்.

அதே சமயம் பெண் பிள்ளைக்கு நல்லொழுக்கம், பெரியவர்களை அவமதிக்காமை, குடும்ப உறுப்பினரை கனிவாக கவனிக்கும் பண்பு போன்றவற்றை போதித்து, அவளைக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து, மற்றொருவனின் வம்சவிருத்திக்காக அவளை தானம் செய்து கொடுத்தால்தான் மேற்கண்ட பலனை பெறமுடியும், இவ்வாறு பெண்பிள்ளை கன்னிகா தானம் செய்வதால் 21 தலைமுறைகளும் கரையேறுகிறது என்றால் பெண்பிள்ளையைப் பெற்றவன் எப்பேர்ப்பட்ட புண்ணியம் செய்தவன் என சிலாகிக்கிறார்கள் சான்றோர்கள்!

இதன் காரணமாகத்தான் முன் காலத்தில் ஏழை பெண்களின் திருமணத்திற்கு உதவுவது, பணக்காரர்கள் தங்கள் செலவில் திருமணம் செய்து வைப்பது போன்ற செயலில் ஈடுபட்டனர். வசதி வாய்ப்பு பெற்றவர்கள் கடமைக்காக செய்யாமல், ஒரு ஏழைப் பெண் மணவாழ்க்கை அமைய உள்ளார்ந்த அன்போடு உதவி செய்தால், தனது வம்சாவழியில் அனுபவித்து வரும் மிகக் கொடிய பாவங்களின் தீவிரத்தில் இருந்து விடுபடலாம்.









www.aanmeegamalar.com



# ஆன்மிக சிந்தனையை சிதைக்க நினைக்கும் காமம், காமத்தை அடக்க உதவும் தியானம்...

மூலாதாரம் என்பது, நான்கு இதழ்கள் கொண்ட தாமரை மலர் போல இருக்கும். இந்த தாமரை வெள்ளை நிறமானது. இதில் குண்ட லினி சக்தி என்பது மூன்றரை அங்குல அளவில் வட்டமாக ஒரு பாம்பு எப்படி சுருட்டிக் கொண்டு படுத்திருக்குமோ அதுபோலவே படுத்திருக்கும். இந்த பாம்பின் தலை சுழுமுனை நாடியின் துவாரத்தை அடைத்துக் கொண்டு இருக்கிறது. மூலாதாரத்தை நிலம் மற்றும் மண்ணோடு சம்பந்தப்படுத்தி யோக நூல்கள் கூறுகின்றன.

மூலாதாரத்தில் ஆட்சி செய்கின்ற சக்தியின் பெயர் ஷாகினி. நிலம் என்ற தத்துவத்தின் அதற்கு காரணமான நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பூத சக்திகளும் அடங்கி இருக்கிறது. ஐந்து பூதங்களின் சக்தியாக விளங்குவதனால், மூலாதார சக்கரத்தின் அதிதேவதையான ஷாகினி ஐந்து முகங்கள் கொண்டவளாக இருக்கிறாள். இவளுக்கு மூன்று கண்களும், நான்கு கைகளும் உண்டு. கைகளில் அங்குசம், தாமரை புத்தகம் ஆகியவற்றை தாங்குவதோடு, சின்முத்திரையும் காட்டப்படுகிறது. வ,ச,ஷ,ஸ ஆகிய அச்சரங்கள் தேவியின் இருப்பிடமாகும். நான்கு அச்சரங்கள் என்பது வரதா, ஸ்ரீ, ஷன்டா,சரஸ்வதி என்ற சக்திகளை குறிக்கும். இவர்கள் சக்கர அதி தேவதையான, சாகினி தேவியின் பரிவாரங்கள் என்று சொல்லப்படுகிறது. சாகினி தேவி தனது ஆகர்ஷனத்தை எலும்புகளில் வைத்துள்ளாள்.

குண்டலினி சக்தி, மூலாதாரத்திலிருந்து கீழ்நோக்கி செயல்படுகிற போது, இனச் சேர்க்கை சம்மந்தமான சிந்தனைகளை அதிகப்படுத்துகிறது. இந்த இடத்தில் ஷியா சக்தியான, பார்வதி பரமசிவன், காமேஸ்வரன் காமேஸ்வரியாக இது சிருஷ்டி கட்டத்தின் முதல் நிலையாகும். இதனை காமகலை என்று வாத்ஸ்யாயனார், அதீ வீரராமபாண்டியன் போன்ற காம நூல் வல்லுனர்கள் அழைக்கிறார்கள். லோக குருவான ஆதிசங்கரர் காமகலையை விளக்கம் சொல்ல வரும்போது, காமம்



என்பது சூரிய சக்தியாகவும், கலை என்பது சந்திரனாகவும் குறிப்பிடுகிறார். அதாவது சூரிய கலையான பிங்கலையும், சந்திர கலையான இடகலையும், மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடும் போது, அஜபா என்ற மந்திர ஒலியாக வருவதை சங்கரர் குறிப்பிடுகிறார்.

அஜபா என்ற மந்திரத்தை பற்றி விநாயகர் அகவலில் தமிழ்பெரும் சித்தர் ஔவையார் குறிப்பிடுவதை நாம் அறிவோம். இயற்கையாக, சுவாச கோசத்திற்குள் காற்று நடந்து சென்று, வெளியில் வருகின்ற ஒலியே அஜபாமந்திரம் ஆகும். காற்று உள்ளே சென்று வெளியே வருவது ஒரு சுவாசம் எனப்படுகிறது. ஒருநாளையில் சராசரியாக, மனிதன் இருபத்தோராயிரத்து அறநூறு முறை சுவாசம் விடுகிறான். ஒவ்வொரு சுவாசமும், அஜபா மந்திரமாக உணர்ந்து நடத்தும் போது, மிக சுலபமாக குண்டலினி பாம்பு கண்விழிப்பு கொள்ளும் என்று ஔவை நம்புகிறாள்.

அஜபாமந்திரம் மூச்சுக் காற்றில் இருந்து கொண்டே இருந்தால், குண்டலினி சக்தி யானது கீழ்நோக்கியே வராது. வருவதை பற்றி யோசிக்காது. மாறாக மந்திர உணர்வு இல்லாது போனால், சிற்றின்ப வேட்கையே அதிகமாக தோன்றும். மங்கையரின் கன்னமும், மதுக்கோப்பை கிண்ணமும் கவர்ந்து இழுக்கும்.

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று ஆரவாரத்தோடு ஆடவைக்கும். உண்பது, உறங்குவது, பிள்ளைகளை பெறுவது இவைகள் மட்டுமே வாழ்க்கை என்று தோன்றும். உடம்பு முழுவதும் வியாதிகள் பீடித்து இறப்பதற்கு முன்பே, நரக வாழ்க்கையை காட்டும்.

இப்படி மூலாதாரத்தில் தோன்றுகின்ற காம சிந்தனை அனாஹத சக்கரம் வரையில் மனிதனை தொடர்ந்து கொண்டே வரும், அனாஹத்தில் தான் குண்டலினி என்ற சிவபெருமான், காமம் என்ற மன்மதனை எரித்து சாம்பலாக்குகிறார்.

மூலாதாரத்தில் இருந்து காம அரக்கனை சம்ஹாரம் செய்து புறப்படுகிற குண்டலினி, சுவாதிஷ்டானம் என்ற இரண்டாவது நிலைக்கு வந்து சேர்கிறது. இவ்விடம் நீர் என்ற தத்துவத்தின் இருப்பிடம். இதன் வடிவம் ஆறு இதழ்கள் கொண்ட தாமரைப்பூவாகும். இந்த தாமரை பொன்னிறத்தில்




ஜொலித்து கொண்டிருக்கிறது. இதை ஆட்சி செய்யும் சக்தியை காகினி என்று அழைக்கிறார்கள். நீர் தத்துவத்தின் மூலகாரணங்களாக, தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பூதங்கள் ஐந்தும் அமைகிறது. தண்ணீர் தவிர, மற்ற நான்கு பூதங்களை விளக்குவதற்கு காகினி என்ற சுவாதிஷ்டான சக்தி, நான்கு முகமுடையதாக, சூலம், பாசம், கபாலம், அபயமுத்திரை ஆகியவைகள் தாங்கிய நான்கு கைகள் கொண்டதாகவும் இருக்கிறது.

காகினி என்ற சக்தி கொழுப்பு தாதுவின் அடிப் படையில் இயங்குகிறது. மாமிசம் என்ற தாதுவில் மேதஸ் என்ற புதிய தாது உற்பத்தியாகிறது. இது மஞ்சள் நிறமுடைய கொழுப்பு தாதுவை உண்டாக்குகிறது. மேலும் சுவாதிஷ்டானம் ஆறு இதழ்களை கொண்ட தாமரை மலராக இருப்பதனால், ஒவ்வொரு இதழும் பந்தினி, பத்ரகாளி, மஹாமாயா, லம்போஸ்டி, ரகதா என்ற ஐந்து பரிவார சக்திகளின் பெயர்களை தாங்கி, ஆறாவது சக்தியாக காகினி இருக்கிறது.

இந்த சக்கரத்தில், குண்டலினி சக்தி செயல்படுகிற போது, இனச்சேர்க்கை உணர்வு அதிகமாக தூண்டப்படும். சிற்றின்ப வேட்கையும், சிற்றின்ப ஆற்றலும், கட்டுகடங்காத காட்டெருமை கூட்டத்தைப் போல, சண்டித்தனம் செய்யும். மனம் சதா, சர்வகாலமும் ஆண்பெண் சேர்க்கையை பற்றியே எண்ணி கொண்டிருக்கும். ஆன்மீக வழியில் செல்கிறேன் என்று நெறிபிரண்டு போகின்ற பல சந்நியாசிகள், குண்டலினி சக்தி இந்த சக்கரத்தில் இருக்கும் போதே தவறுகளை செய்து தங்களது தவ வாழ்க்கையை முடித்து கொள்கிறார்கள். சுவாதிஷ்டானம் என்ற இந்த இரண்டாவது நிலையிலேயே குண்டலினி சக்தி அதிகநாள் நீடித்தால் விந்து விட்டவன் நொந்து சாவான் என்பது போல உடல் சிதைந்து மரணம் தேடி வரும்.

குண்டலினி சக்தியை, இந்த அபாய கட்டத்திலிருந்து மீட்டு மேல்நோக்கி தள்ளிவிடக் கூடிய சக்திகளாக, தியானமும், பகவான் நாம சங்கீர்த்தனமும் பெரிய துணை செய்கிறது. உடல் கவர்ச்சி இறை கவர்ச்சியாக மாற்றப்படுகிற போது, காமம் என்ற கீழான உணர்ச்சி, பக்தி என்ற புனித உணர்வாக மாறிவிடுகிறது. பக்தி இல்லையேல், இரண்டாவது படியோடு குண்டலினி பயிற்சியும், ஆன்மீகப் பயணமும் முற்றுப் பெற்றுவிடும். அதனால் தான் நமது முன்னோர்கள் ஊரு தோறும், ஆலயங்களை எழுப்பினார்கள். ஆற்றங்கரை அரசமரத்தடி, ஊர் சந்து முனை என்று எந்த இடத்தை பார்த்தாலும் தெய்வ மூர்த்திகளை சாசனம் செய்து வைத்தார்கள்.

மூன்றாவது நிலைக்கு, மணிபூரகம் என்று பெயர். மணிபூரகம் பத்து இதழ்கள் கொண்ட, செம்மை நிறமான தாமரை பூ. இது அக்னி தத்துவம். அக்னி, வாயு, ஆகாயம் ஆகிய மூன்று பூதங்கள் இந்த சக்கரத்திற்கு ஆதாரமாக இருப்பதனால், மூன்று முகங்கள் கொண்ட லாகினி என்ற சக்தி இதை இயக்குகிறது. வஜ்ராயுதம், வேல், குண்டாந்தடி அபய ஹஸ்தம் ஆகியவைகளை கொண்ட நான்கு கைகளும் இந்த சக்திக்கு உண்டு. மணிபூரகம், பத்து இதழ்கள் கொண்ட தாமரை பூ என்பதனால் டமாரி, டங்காரிணி, ஞாரினா, தாமஷி, ஸ்தான்வீ , தாட்சாயிணி, காஹிணி, நாரி, பார்வதி, பட்காரிணி என்ற பத்து பரிவார சக்திகள் லாகினி தேவியின் துணையாக அமைந்துள்ளது.

குண்டலினி சக்தி மணிபூரகத்தை தோடும் போது காமம் வேரோடு பிடுங்கப்பட்டு விடுகிறது.ஆத்ம சிந்தனையும் ஒருவித மகிழ்ச்சியும் அமைதியும், குடிகொண்டிருக்கும். ஆனால், இந்த நேரத்தில் தொடர்ந்த பயிற்சியை சாதாகன் செய்யாவிட்டால், புத்தி தடுமாறி, மீண்டும் சிற்றின்ப சேற்றிற்குள் விழுந்துவிட நேரிடும். கிடைத்த ஆன்மீக அமைதி போதும் என்ற திருப்தி இல்லாமல் இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்ற ஆசை நெருப்பை இந்த இடத்தில் தான், மனிதன் வளர்த்துக் கொள்ள வேண்டும். இங்கு வளர்க்கப்படும் ஆசை, உலக ஆசை அல்ல. உலக நாயகனை நேருக்கு நேராக காண்பதற்கான அடுத்து குண்டலினி சக்தி புறப்பட்டுச் செல்லும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434



# நைவைத்தியமும் பலன்களும்

சிவபெருமானுக்கு நாம் படைக்கும் நைவேத்திய பொருட்களால் கிடைக்கும் பலன்கள் வருமாறு:

1. தயிர் சாதம், நீர் மோர் மூல பவுத்திரம், எலும்புருக்கி நோய் தீரும்.
2. பால், சர்க்கரைப் பொங்கல் வயிற்று கோளாறு தீரும்.
3. தேன், திணை மாவு குழந்தை பாக்கியம் கிடைக்கும்.
4. தயிர் சாதம் காரியத் தடை நீங்கும்.
5. எலுமிச்சை, தேங்காய் சாதம் அடிவயிற்றில் இருந்து தொடை வரை உள்ள நோய்கள் தீரும்.
6. வெண்பொங்கல், கடலை, சுண்டல்ஆஸ்துமா, மூச்சு சம்மந்த மான நோய் தீரும்.
7. பங்குனி மாத பிரதோஷத்தன்று தேங்காய் சாதம், தக்காளி சாதம் மணக்கிலேசம், பித்தம், பைத்தியம் தீரும்.



மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

# குருக்ருபாயோகப்படி ஸாதனை செய்யும் வழிமுறை

வ்யஷ்டி ஸாதனை மற்றும் ஸமஷ்டி ஸாதனை, குருக்ருபாயோகத்தின் இரு அங்கங்களாகும். வ்யஷ்டி ஸாதனை என்பது தனிப்பட்ட ஆன்மீக முன்னேற்றத்திற்காக செய்யப்படும் முயற்சி. ஸமஷ்டி ஸாதனை என்பது சமூகத்தினரின் ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட மேற்கொள்ளப்படும் முயற்சி.

**வ்யஷ்டி ஸாதனை**

வ்யஷ்டி ஸாதனையில் எட்டு அங்கங்கள் உள்ளன.

வ்யஷ்டி ஸாதனையின் அடித்தளமாக விளங்குவது குறைகளைக் களைதல் மற்றும் அஹம்பாவத்தை களைதலுக்கான முயற்சி: வ்யஷ்டி ஸாதனையின் எட்டு அங்கங்களில் முதல் இரு அங்கங்களான குறைகளைக் களைதல் மற்றும் அஹம்பாவத்தைக் களைதல் ஆகியவை எவ்வாறு வ்யஷ்டி ஸாதனையின் அடித்தளமாக விளங்குகிறது என்பதை கீழே கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

நாமஜபம் மற்றும் குறைகளை, அஹம் பாவத்தை களைதல் ஆகிய இரண்டிற்கும் ஸாதனையின் ஆரம்பத்தில் ஏன் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது?: ஸாதாரணமாக எவருக்கும் நாமஜபமே ஸாதனையின் அடித்தளம் எனத் தோன்றுகிறது. பல மஹான்களும் நாமஜபத்தின் மஹிமையை எடுத்துக் கூறியுள்ளனர். இவ்வாறு இருந்தாலும் நாமஜபத்திற்கும் முன்னதாக ஏன் குறைகளை, அஹம்பாவத்தை களைதல் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பது கீழே விளக்கப்பட்டுள்ளது.



ஸாதகர்கள் குறைகளை, அஹம்பாவத்தை களையும் முயற்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவேண்டும்: ஆழ்மனம், பல்வேறு குறைகளால் நிரம்பியிருந்தால் அங்கு நாமஜப கேந்திரம் உருவாவது கடினம். அதனால் நாமஜபத்தை மன ஒருமைப்பாடுடன் செய்வதும் கடினமாகிறது. அந்த சமயத்தில் குறைகளை, அஹம்பாவத்தை களைவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவேண்டும். கலியுகத்தில் பெரும்பான்மையோரிடம் பல்வேறு குறைகள் மற்றும் அஹம்பாவம் இருப்பதால் 90 ஸாதகர்கள் தங்களின் குறைகளை, அஹம்பாவத்தை களையும் முயற்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டி உள்ளது. குறைகள் மற்றும் அஹம்பாவத்தை களைய சுய ஆலோசனை வழங்கிய பின்பு மற்ற நேரங்களில் மனதை காலியாக வைத்திராமல் வேலை செய்து கொண்டோ அல்லது உட்கார்ந்தோ நாமஜபம் செய்யுங்கள். சில மாதங்களில் குறைகள் மற்றும் அஹம்பாவம் சிறிது குறைந்த பிறகு வேலை செய்து கொண்டோ அல்லது உட்கார்ந்தோ நாமஜபம் செய்யும் நேரத்தை அதிகரிக்க வேண்டும். அவ்வாறு நாமஜபம் செய்யும்போது மனதின் ஒருமைப்பாடு சிறிது சிறிதாக அதிகரிப்பதை உணர முடியும். குறைகள் மற்றும் அஹம்பாவம் குறைந்தவுடன் நாமஜப கேந்திரம் சுலபமாக உருவாகிறது.

10 சதவிகித ஸாதகர்கள் நாமஜபத்திற்கு அதிக முக்கியத்துவம் தருவதன் அவசியம் : 10 சதவிகித ஸாதகர்களிடம் குறைகளும் அஹம்பாவமும் குறைந்த அளவே உள்ளன. அவர்கள் நாமஜபத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அவர்களின் ஆழ்மனதில் நாமஜப கேந்திரம் சுலபமாக ஏற்படுகிறது. அந்த கேந்திரத்தை மேலும் பலப்படுத்தும்போது தானாகவே மற்ற குறைகளும் அஹம்பாவமும் நஷ்டமடைகின்றன.

குறைகள் மற்றும் அஹம்பாவத்தை களைவதற்கு முக்கியத்துவம் அளிப்பதன் காரணம் எல்லா காரியங்களும் மனதால் நடக்கின்றன. மனிதர்கள் மூலம் என்ன காரியங்கள் நடக்கின்றனவோ அவை அவர்களின் மனதால் நடக்கின்றன. உடலால் செய்யப்படும் ஒவ்வொரு காரியமும் மனதாலேயே நடக்கின்றன. மனம் நல்லதாக இருந்தால், அதாவது மனதில் குறைகளும் அஹம்பாவமும் இல்லையென்றால் உடலால் சரியான முறையில் காரியங்கள் நடக்கின்றன மற்றும் குறைகள், அஹம்பாவம் இருந்தால் உடலால் தவறான காரியங்கள் நடக்கின்றன.

ஆ. அஷ்டாங்க ஸாதனையில் குறைகள் மற்றும் அஹம்பாவம் ஆகிய இரண்டும் தீய குணங்கள் ஆகும். மற்ற ஆறும் குணங்களாகும். தீய குணங்களைக் களையாமல் நற்குணங்களை வளர்க்க முடியாது.

இ. குணத்தை அதிகரித்து பிறகு குறைகளைக் களைய பல வருடங்கள் பிடிக்கும். இதற்கு மாறாக குறைகளை முதலில் களைந்தால் குணங்கள் விரைவில் வளரும்.

எந்த யோக வழியைப் பின்பற்றி ஸாதனை செய்தாலும் குறைகள் மற்றும் அஹம்பாவத்தைக் களைதலுக்கு முக்கியத்துவம் அளிப்பது அவசியம் !: கர்மயோகம், பக்தியோகம், ஞான யோகம், ஹடயோகம், குண்டலினியோகம் போன்ற எந்த யோக வழியிலும் முன்னேற்றம் அடைய குறைகளை அஹம்பாவத்தைக் களைவது அவசியமாகிறது. உதாரணத்திற்கு தியானயோகப்படி ஸாதனை செய்யும்போது அவர்களிடமுள்ள குறைகளால் எவ்வளவு வருடங்கள் முயன்றாலும் தியானத்தில் மனம் லயிப்பதில்லை. குறைகளையும் அஹம்பாவத்தையும் ஓரளவு களைந்த பின்பே ஸாதனையில் உண்மையான முன்னேற்றம் ஏற்பட ஆரம்பிக்கிறது. ஸத்ய, த்ரேதா மற்றும் துவாபர யுகங்களில் மனிதர்களின் குறைகளும் அஹம்பாவமும் குறைவாக இருந்தன. இன்றைய கலியுகத்தில் குறைகளும் அஹம்பாவமும் அதிக அளவு இருப்பதால் பலருக்கு ஸாதனையில் முன்னேற்றம் ஏற்படுவதில்லை. இதற்கு ஸாதகர்கள் எந்த யோக வழியைப் பின்பற்றி ஸாதனை செய்தாலும் விரைவான ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட அவர்கள் முதலில் குறைகள் மற்றும் அஹம்பாவத்தை களைவதற்கு முக்கியத்துவம் அளிப்பது அவசியமாகிறது.

யுகங்கள்தோறும் சர்வ சாதாரண மனிதனின் ஆன்மீக நிலை மற்றும் அவனிடமுள்ள குறைகள் மற்றும் அஹம்பாவத்தின் பிரமாணம்

| யுகம் | ஆன்மீக நிலை (%) | குறைகள் (%) | அஹம்பாவம் (%) |
|---|---|---|---|
| 1. ஸத்ய | 90 | 10 | 5 |
| 2. த்ரேதா | 70 | 20 | 15 |
| 3. துவாபர | 50 | 30 | 20 |
| 4. கலி | 20 | 40 | 30 |

மேலே உள்ள அட்டவணையின் மூலம் இன்றைய கலியுகத்தில் குறைகள் மற்றும்


ஆன்மிகமலர் மெயில் புக்

அஹம்பாவத்தை களைவதன் முக்கியத்துவம் தெரிய வருகிறது.

(பராத்பர குரு) டாக்டர் ஜயந்த் ஆடவலே (28.45.2015)

அங்கம்1 குறைகளைக் களைய முயற்சித்தல்: ஏறக்குறைய எல்லோரிடமும் கோபம், சிடுசிடுப்பு, மறதி, சோம்பல் போன்ற பலவித குறைபாடுகள் வெவ்வேறு அளவுகளில் காணப்படுகின்றன. நம்மிடமுள்ள குறைபாடுகளால் ஸாதனைக்கு தீங்கு ஏற்படுகிறது. அதோடு ஆன்மீக கஷ்டங்களும் ஏற்பட வாய்ப்புண்டாகிறது. அதனால் ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள குறைபாடுகளைக் களைவதற்காக, முழு உணர்வுடன் முயற்சிப்பது அவசியமாகிறது. இவ்வாறான முயற்சிகளை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பது ஸனாதனின் ஸத்ஸங்கங்களில் சொல்லித் தரப்படுகிறது. அதேபோல் இதைப் பற்றிய வழிகாட்டுதல் ஸனாதனின் குறைகளைக் களைதல் (4 பாகங்கள்) நூல் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

அங்கம் 2 அஹம்பாவத்தைக் குறைப்பதற்கான முயற்சி : மனிதனுள் அஹம்பாவம் சிறிதளவு இருந்தாலும் அவனால் இறைவனுடன் ஒன்ற முடியாது. அதனால் ஸாதனையின் ஒரு பகுதியாக, அஹம்பாவத்தைக் குறைக்க ஒருமுனைப்போடு முயற்சிப்பது மிகவும் அவசியமாகிறது. பிரார்த்தனை, நன்றியுணர்வு, உடல் ஸேவை ஆகியவற்றின் மூலம் அஹம்பாவம் குறைகிறது. அஹம்பாவத்தைக் குறைக்க என்ன முயற்சிகள் மேற்கொள்வது என்பது பற்றிய விவரங்கள் அஹம்பாவத்தை களைவதற்கான ஸாதனை என்ற ஆங்கில நூலில் உள்ளது.

அங்கம் 3 நாமஜபம் : பூஜை, ஆரத்தி, பஜனை போன்ற உபாஸனை வழிகளால் தெய்வ தத்துவத்தின் பயன் கிட்டுகிறது. ஆனால் இவ்வித உபாஸனை வழிகளுக்கு நேர வரையறை இருப்பதால் பலனும் குறைவாகவே கிட்டுகிறது. தெய்வ தத்துவத்தின் லாபம் தொடர்ந்து கிடைப்பதற்கு தெய்வ உபாஸனை தொடர்ந்து நடைபெற வேண்டும். அது போன்று தொடர்ந்து நடைபெறக் கூடிய ஒரே ஸாதனை நாமஜப ஸாதனை மட்டுமே. கலியுகத்திற்கேற்ற எளிய உன்னத ஸாதனை நாமஜபம் ஆகும்.

எந்த நாமத்தை ஜபம் செய்ய வேண்டும்? : சாதாரணமாக ஸாதனையின் ஆரம்ப நிலையில் ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட குலதெய்வத்தின் நாமஜபத்தையும் அதிருப்தி அடைந்த நம் மூதாதையர் தரும் கஷ்டங்களிலிருந்து பாதுகாப்பு பெற தத்த நாமஜபத்தையும் செய்ய வேண்டும். ஆனால் தீய சக்திகளால் ஏற்படும் கஷ்டங்கள், க்ரஹபீடை போன்றவை இருந்தால் காலத்திற்கேற்ற வெவ்வேறு நாமஜபத்தை செய்ய வேண்டியது அவசியமாகிறது. எல்லா நாமஜபங்களைப் பற்றிய விரிவான விளக்கங்கள் ஸனாதனின் நூல் எந்த நாமஜபத்தை செய்ய வேண்டும்? மற்றும் கையேடு ஏன் மற்றும் எந்த நாமஜபத்தை செய்ய வேண்டும்? ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626



# உடலுக்கு நண்பனான அரிசியை விரோதியாக்கிய வெளிநாட்டு நிறுவனங்கள்

உலகிற்கே அரிசியை அறிமுகப்படுத்தி, உடலை கட்டுக்கோப்பாக வைத்திருந்த நமது தமிழ்நாட்டில், தற்போது அரிசி சாதத்தை பார்த்தால் பயந்து ஓடும் படி பல்வேறு சூழ்ச்சி களை செய்து வைத்துள்ளனர் வெளிநாட்டு நிறுவனங்கள்.

அக்காலத்தில் பயிரிடப்பட்ட அரிசியின் வகைகளுக்கேற்ப, ஒவ்வொரு நோயை அண்ட விடாமல், அந்த நோய்க்கு மருந்தாகவும் விளங் கியது அரிசி. ஒருசில கால கட்டங்களில் நமது இயற்கை மருத்துவர்கள் ஒருசில வகையான அரிசியை பயன்படுத்த சொல்லி அறிவுறுத்தி, அரிசியையே மருந்தாகவும் பயன் படுத்தியுள்ளனர்.

இதுபோன்று இயற்கையுடன் வாழ்ந்த நமது நாட்டின் வளத்தை கொள்ளை அடித்து, அவற்றை அழித்து, வெளிநாட்டில் குப்பைக்குச் சமமாக மதிக்கப்படும் ஓட்ஸ் வகைகளை மதிப்புமிக்கதாக மாற்றி வைத்துள்ளனர் இக் காலத்து மருத்துவர்கள்.

அரிசி சாதம் சாப்பிட்டதால்தான் சுகர் அதிகரிக்கும் நோய்கள் வரும் என்று ஏமாற்றுகிறார்கள் ஆங்கில மருத்துவர்கள்.

உண்மையில் அரிசி சாதம் சாப்பிட்டால் நோய்களை குணப்படுத்தவே செய்யும் அந்த வகையில் எந்தெந்த அரிசி என்னென்ன பலன்களைத் தரும் என்பதை பார்ப்போம்!?

**1.கருப்பு கவுனி அரிசி**
மன்னர்கள் சாப்பிட்ட அரிசி. புற்றுநோய் வராது. இன்சுலின் சுரக்கும்.

**2.மாப்பிள்ளை சம்பா அரிசி**
நரம்பு, உடல் வலுவாகும். ஆண்மை கூடும்.

**3.பூங்கார் அரிசி**
சுகப்பிரசவம் ஆகும். தாய்ப்பால் ஊறும்.

**4.காட்டுயானம் அரிசி**
நீரிழிவு, மலச்சிக்கல், புற்று சரியாகும்.

**5.கருத்தக்கார் அரிசி**
மூலம், மலச்சிக்கல் போன்றவை சரியாகும்.

**6.காலாநமக் அரிசி**
புத்தர் சாப்பிட்டதும். மூளை, நரம்பு, இரத்தம், சிறுநீரகம் சரியாகும்.

**7.மூங்கில் அரிசி**
மூட்டுவலி, முழங்கால் வலி சரியாகும்.

**8.அறுபதாம் குறுவை அரிசி**
எலும்பு சரியாகும்.

**9.இலுப்பைப்பூசம்பார் அரிசி**
பக்கவாதத்திற்கு நல்லது. கால்வலி சரியாகும்.

**10.தங்கச்சம்பா அரிசி**
பல், இதயம் வலுவாகும்.

**11.கருங்குறுவை அரிசி**
இழந்த சக்தியை மீட்டுத் தரும். கொடிய நோய்களையும் குணப்படுத்தும்.

**12.கருடன் சம்பா அரிசி**
இரத்தம், உடல், மனம் சுத்தமாகும்.

**13.கார் அரிசி**
தோல் நோய் சரியாகும்.

**14.குடை வாழை அரிசி**
குடல் சுத்தமாகும்.

**15.கிச்சிலி சம்பா அரிசி**
இரும்பு சத்து, சுண்ணாம்பு சத்து அதிகம்.

**16.நீலம் சம்பா அரிசி**
இரத்த சோகை நீங்கும்.

**17.சீரகச் சம்பா அரிசி**
அழகு தரும். எதிர்ப்பு சத்தி கூடும்.

**18.தூய மல்லி அரிசி**
உள் உறுப்புகள் வலுவாகும்.

**19.குழியடிச்சான் அரிசி**
தாய்ப்பால் ஊறும்.

**20.சேலம் சன்னா அரிசி**
தசை, நரம்பு, எலும்பு வலுவாகும்.

**21.பிசினி அரிசி**
மாதவிடாய், இடுப்பு வலி சரியாகும்.

**22.சூரக்குறுவை அரிசி**
பெருத்த உடல் சிறுத்து அழகு கூடும்.

**23.வாலான் சம்பா அரிசி**
சுகப்பிரசவம் ஆகும். பெண்களுக்கு அழகு கூடி இடை மெலியும். இடுப்பு வலுவாகும். ஆண்களுக்கு விந்து சக்தி கூடும்.

**24.வாடன் சம்பா அரிசி**
அமைதியான தூக்கம் வரும்.


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.